வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 05.05.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 126 பக்கங்கள் : 16


08 மேதினப் பேரணிகளின் அரசியல் அர்த்தங்கள்


09 காது குத்தி கடுக்கன் பூட்டும் அரசியல் தமிழரைச் சுற்றிவளைக்க வருகிறது!



10 மீண்டும் இராவணேசன்


13 ஆஸியில் நாடு கடத்தப்பட்ட இந்திய உளவாளிகள்!!

# ஜப்பானிய அரசின் திட்டங்கள் விரைவாக மீள ஆரம்பிக்கப்படும்

## ஜனாதிபதியிடம் நேரில் தெரிவித்தார் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, மே 05

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை விரிவுபடுத்தல், இலகு ரயில் திட்டம் உட்பட ஜப்பான் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு, தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக மீள ஆரம்பிப்பதே ஜப்பான் அரசாங்கத்தின் நோக்கமாகும்.

- இவ்வாறு ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவா தெரிவித்தார். 15



# நாமல் நீண்டகாலம் காத்திருக்க வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த



கொழும்பு, மே 05

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, நீண்டகாலம் காத்திருக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறக் கூடிய வேட்பாளரை சிறீ லங்கா பொது ஜன பெரமுன நிச்சயம் நிறுத்தும் என்றும் 15

# ரணில் விடுத்த அழைப்பை நிராகரித்தது சஜித் தரப்பு!

கொழும்பு, மே. 05

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை ஏற்கப்போவதில்லை. அவருடன் இணைந்து செயல்படுவதற்கு நாம் தயாரில்லை என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் 15

# மருந்துகள், மருத்துவ உபகரணங்களுக்கு நாடளாவிய ரீதியில் பெரும் தட்டுப்பாடு!

கொழும்பு, மே. 05

நீரிழிவு, புற்றுநோய், இருதய நோய்கள் உள்ளிட்ட பல நோய்களுக்கு தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு தட்டுப்பாடு காணப்படுவதாக அரச மருந்தாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் நோயாளர்கள் பல பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக அரச மருந்தாளர்கள் சங்கத்தின் தலைவர் துஷார ரணதேவ தெரிவித்தார்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவின் பிரதி 15

# கடன் வழங்குநர் இணக்கப்பாட்டில் வெளிப்படைத்தன்மை அவசியம்!

## ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்து

கொழும்பு, மே. 05

"நண்பன் என்ற ரீதியில் இலங்கைக்கு அவசியமான ஒத்துழைப்புக்களை ஜப்பான் தொடர்ந்து வழங்கும்" என்ற செய்தியைக் கூறுவதற்காகவே தான் இலங்கைக்கு வருகை தந்திருப்பதாக தெரிவித்துள்ள ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொகோ கமிகவா, இலங்கைக்கும் உத்தியோகபூர்வ கடன் வழங் குநர் 15



# தலைமன்னாரில் இருந்து கிழக்குக்கு புதிய எண்ணெய் குழாய் இணைப்பு!

## இந்திய தூதுவர் அறிவிப்பு

கொழும்பு, மே. 05

தலைமன்னாரிலிருந்து கிழக்கு மாகாணத்துடன் புதிய எண்ணெய் குழாய் இணைப்பு ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக இந்தியத் தூதுவர் சந்தோஸ் ஜா அறிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடல் பயணம் மற்றும் தரைவழிப்பயணம் தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார்.

இதன்படி, நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறை வரையிலான படகுச் சேவை இன்னும் இரண்டு வாரங்களில் 15

# சிறு குற்றங்களில் ஈடுபடுவோருக்கு வீட்டுக் காவல்!

கொழும்பு, மே. 05

சிறு குற்றங்களில் ஈடுபடும் நபர்களை வீட்டுக் காவலில் வைக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பான சட்டமூலம் எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் கூறினார்.

சிறு குற்றங்களுக்காக நீண்டகாலம் சிறையில் 15

# மே 15 பாராளுமன்றம் கலைக்கப்படுகிறதா?

## கொழும்பு அரசியலில் பரபரப்பு

கொழும்பு, மே. 05

எதிர்வரும் 15ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்படும் சில தென்னிலங்கை சிங்கள ஊடகங்கள் நேற்று வெளியிட்ட செய்திகளால் கொழும்பு அரசியல் களத்தில் பரபரப்பான நிலைமை ஏற்பட்டது. 15

# வீசா நடைமுறையில் தலையிடுமாறு ரணிலை கோரும் சுற்றுலாத்துறையினர்

கொழும்பு, மே. 05

சுற்றுலா வீசா நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றத்தில் தலையிடுமாறு இலங்கையின் முக்கிய சுற்றுலாப் பங்குதாரர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வலியுறுத்தியுள்ளனர்.

2024 ஏப்ரல் 17 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய ஒழுங்குமுறையின்படி, அனைத்து சுற்றுலா வீசாவின் விண்ணப்பங்களையும் ஒரு தனியார் நிறுவன இணையத்தளம் 15

## ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான

# கோட்டாபயவின் அறிக்கைக்கு கர்தினால் மல்கம் பதில் கடிதம்!

கொழும்பு, மே. 05

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் வெளியிட்ட அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு இனிப்பு விற்பனை; ஒரு இலட்சம் ரூபாய் அபராதம்!


மானிப்பாய், மே 05

மானிப்பாய் ஆனைக்கோட்டையில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவான சொக்லேற் வகைகள் மற்றும் இனிப்பு வகைகள் கைப்பற்றப்பட்டு ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கு. பாலேந்திரகுமார் மற்றும் கி. அஜந்தன் தலைமையில் விற்பனை நிலையங்களில் இடம்பெற்ற திடீர் சுற்றி வளைப்புக்களில் முறையான விதத்தில் இறக்குமதி செய்யப்படாத மற்றும் நிறக்குறியீடுகள், விலைப்பட்டியல் இல்லாத வெளிநாட்டு சொக்லேற் வகைகளும், குளோத்ஜாம், சோன்பப்படி போன்ற இனிப்பு உணவுகளும் கைப்பற்றப்பட்டு இறக்குமதியாளர்களுக்கும் விநியோகஸ்தர்களுக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிவான் கடும் எச்சரிக்கை விடுத்ததுடன் ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதித்தார். (எ)

பொருளாதார பின்னடைவிலிருந்து மீளும்

## இலங்கையின் நிலை குறித்து திருப்தி கொள்கிறது ஜப்பான்



கொழும்பு, மே 05

கடும் பொருளாதார பின்னடைவிலிருந்து மீளும் இலங்கையின் ஆரம்ப நிலை திருப்திகரமாக உள்ளது.- இவ்வாறு இலங்கை வந்துள்ள ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகவா தெரிவித்துள்ளார்.

ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகவா, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை நேற்று அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, கடுமையான பொருளாதாரப் பின்னடைவை இலங்கை எதிர்கொண்டது. தற்போது அந்தப் பாதிப்புக்களிலிருந்து மீண்டு வரும் இலங்கையின் ஆரம்ப நிலை திருப்திகரமாக காணப்படுவதால், இலங்கையின் பொருளாதார மீட்சியில் ஜப்பான் மிகுந்த நம்பிக்கையுடன் இருப்பதாக ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் கூறினார். (எ)

## பாதாள குழுக்களை சேர்ந்த 837 பேர் இதுவரை சிக்கினர்

கொழும்பு, மே 05

பாதாள உலகச் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட 20 பொலிஸ் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் மேலும் 9 பேர் கைது செய்யப்பட்டனர். இதன்மூலம் ஒரு மாத காலத்தில் பாதாள உலகக் குழுக்களை சேர்ந்த 837 பேர் சிக்கினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புகளைப் பேணியதாக கூறப்படும் 10 சந்தேகநபர்கள் கைதாகினர்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர், மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர், மேல் மாகாணத்தின் வடக்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர், மாத்தறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் ஆகியோ ரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். (எ)

## ஒரு இலட்சத்து 44 ஆயிரத்தினால் குறைந்தது நாட்டு மக்கள் தொகை

கொழும்பு, மே. 05

இலங்கையின் சனத்தொகை சுமார் ஒரு இலட்சத்து 44 ஆயிரத்தால் குறைந்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கை ஒன்று கூறுவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்தார்.

பத்து ஆண்டுகளில் மக்கள் தொகை எதிர்மறையான வளர்ச்சியைக் காட்டுவது இதுவே முதல் முறை என்று அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள்தொகை குறைவு சதவீதம் 0.6.

இதனால் பெண்களின் தொகை 70ஆயிரமும், ஆண்களின் தொகை 74ஆயிரமும் குறைந்துள்ளது.

இதேவேளை, கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது பிறப்பு எண்ணிக்கை 27421 ஆக குறைந்துள்ளது. இறப்பு எண்ணிக்கையும் 1447 ஆக அதிகரித்துள்ளது. அதிகரிப்பு 1.8 சதவீதம்.

மத்திய வங்கியின் அறிக்கையின்படி நாட்டில் திருமணங்களின் எண்ணிக்கை 19,784 ஆக குறைந்துள்ளது - என்றார். (அ)

## மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியோரத்தில் மருத்துவ கழிவுகள்



மன்னார், மே 05

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி ஓரங்களில் மருத்துவக் கழிவுகள் உட்பட பொலித்தீன் கழிவுகள் முறையற்ற விதத்தில் கொட்டப்பட்டுள்ளதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது.


குறிப்பாக வீதி ஓரங்களில் பொலித்தீன் பைகளால் சுற்றப்பட்டு குப்பைகள் வீதி ஓரங்களில் பல்வேறு இடங்களில் கொட்டப்பட்டுள்ள நிலையில் அவை காற்று காரணமாக முழு பகுதியிலும் நிறைந்து காணப்படுவதுடன் மிருகங்களும் அவற்றை உண்ணும் நிலை ஏற்பட்டுள்ளது.


குறிப்பாக மருத்துவக் கழிவுகளும் முறையற்ற விதத்தில் கொட்டப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மாவட்டத்தின் பிரதான வீதியில் இவ்வாறு குப்பைகள் நீண்ட காலமாகக் கொட்டப்பட்டுவருவதை மன்னார் பிரதேச சபை கவனத்தில் கொள்ளாமல் குப்பைகளை விரைந்து அகற்றாமல் அலட்சியமாக செயல்படுவதை பலரும் கண்டித்துள்ளனர்.

அதேநேரம் பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் போத்தல்கள் அதிகளவு கொட்டப்பட்டு காணப்படுகின்ற நிலையில் அவ்வப்போது பெய்யும் மழையால் டெங்கு நுளம்புகளும் பெருகக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

எனவே, அப்பகுதியில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை விரைவாக அகற்றுவதுடன் அப்பகுதிகளில் குப்பைகளைக் கொட்டும் நபர்களுக்கு எதிராக பிரதேச சபை மற்றும் சுகாதாரத் துறையினர் உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

## மகிந்த, நாமல் மயூரபதி அம்மன் ஆலயத்தில் வழிபாடு





கொழும்பு, மே 05

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ அவரது மனைவி உள்ளிட்டோர் கொழும்பு வெள்ளவத்தை மயூரபதி சிறீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை இரவு விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டனர். (எ)

## இன்று 'அதிக அவதானம்' செலுத்தும் நிலை

### வெப்ப நிலை குறித்து வெளியான அறிவிப்பு

கொழும்பு, மே 05

நாட்டில் இன்று 'அதிக அவதானம்' செலுத்தப்பட வேண்டிய நிலையில் வெப்பமான வானிலை காணப்படக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இன்றைய தினம் வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்திலும் சில இடங்களில் வெப்பச் சுட்டெண், அதாவது மனித உடலால் உணரப்படும் வெப்பம் 'அதிக அவதானம்' செலுத்தப்பட வேண்டிய நிலையில் காணப்படக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் வெப்ப நிலை கவனம் செலுத்தும் மட்டத்தில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் எட்கா உடன்பாட்டை கைச்சாத்திட அரசு இரகசிய நகர்வு!

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



கொழும்பு, மே. 05

இலங்கையின் இறையாண்மையை இந்தியாவுக்கு காட்டிக்கொடுப்பதற்கு ஆட்சியாளர்கள் தயாராகி வருகின்றனர். எட்கா உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்குரிய ஏற்பாடுகளும் இரகசியமாக இடம்பெறுகின்றன என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அத்துடன், இரண்டாவது சுதந்திர போராட்டத்தை ஆரம்பிக்க மக்கள் உத்தர லங்கா சபாகயவுடன் கைகோர்க்க வேண்டும் எனவும் அவர் அறைகூவல் விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் என்றுமில்லாதவாறு பொருளாதார கேந்திர முக்கியத்துவமிக்க இடங்களை விற்பனை செய்யும் நிலை காணப்படுகின்றது. இலங்கை மின்சார சபையை 12 கூறுகளாக பிரித்து இந்திய நிறுவனங்களுக்கு விற்பதற்கு தயாராகின்றனர்.

இலங்கையையும், இந்தியாவையும் இணைப்பதற்குரிய பாதை பற்றியும் பேசப்படுகின்றது. விமான நிலையங்கள் அனைத்தும் இந்தியாவுக்கு வழங்கப்படும் என அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோ கூறியுள்ளார். இந்திய ரூபாவை இலங்கையில் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும். அதேபோல இலங்கை மற்றும் இந்திய சுங்கங்களை இணைப்பதற்குரிய சாத்தியம் பற்றியும் பேசப்படுகின்றது.

இவ்வாறு இலங்கையை இந்தியாவின் மாநிலமாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. இது நாட்டின் இறையாண்மையை காட்டிக்கொடுக்கும் செயலாகும்.

எட்கா உடன்படிக்கையின் உள்ளடக்கங்கள் கோரப்பட்டாலும் அவை வழங்கப்படுவதில்லை. இரகசியமான முறையில் உள்ளடக்கங்கள் இடம் பெற்றுவருகின்றன-என்றார்.

# காஸா சிறுவர் நிதியத்துக்கு 33 இலட்சம் ரூபா அன்பளிப்பு




கொழும்பு, மே. 05

காஸா சிறுவர் நிதியத்திற்கு மாவனல்லை சாஹிரா கல்லூரியிடமிருந்து 33 இலட்சம் ரூபாய் அன்பளிப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

காசா சிறுவர் நிதியத்திற்கு மாவனல்லை சாஹிரா கல்லூரி 33 இலட்சம் ரூபாயை அன்பளிப்புச் செய்துள்ள நிலையில் அதற்கான காசோலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளரும் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளருமான சரத்குமார மற்றும் மாவனல்லை சாஹிரா கல்லூரியின் அதிபர் ஏ.எச்.எம். நவூஷாட் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மேலும், கல்லூரியின் ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர், பழைய மாணவர் சங்கத்தின் உள்ளிட்டவர்களும் இதன்போது கலந்து கொண்டனர். (அ)

# மைத்திரியின் அறிவிப்பால் கொதித்தெழுகிறார் தயாசிறி



கொழும்பு, மே. 05

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை மைத்திரிபால சிறிசேன தன்னிச்சையாக தீர்மானிக்க முடியாது என்று அக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நீதி அமைச்சர் விஜயதாச களமிறங்குவார் என அக்கட்சியின் முன்னாள் தலைவரான மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே தயாசிறி ஜயசேகர இவ்வாறு கூறியுள்ளார்.

அதேவேளை, சுதந்திரக் கட்சிக்குள் பிளவுபட்டுள்ள அணிகள் ஒன்றுபட வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

# சட்டவிரோதமாக ஆடு, மாடுகள் ஏற்றிச் சென்ற லொறி சிக்கியது

## மூவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, மே. 05

சட்டவிரோதமான முறையில் 5 மாடுகளை ஏற்றிச் சென்ற கப் வாகனம், 20 ஆடுகளை ஏற்றிச் சென்ற லொறி என்பன கைப்பற்றப்பட்டதாகவும் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாவும் அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

மிஹிந்தலை நகரத்தில் செட்டிக்குளத்திலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த லொறியொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சட்டவிரோதமான முறையில் 20 ஆடுகளை ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கெக்கிராவ பொலிஸ் பிரிவுக்குற்பட்ட எல கமுவ பகுதியில் தெமட்டெவயிலிருந்து பும்போகம நோக்கிப் பயணித்த கப் வாகனமொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சட்டவிரோதமான முறையில் 5 மாடுகளை ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சிவனொளிபாதமலையில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு மட்டும் அனுமதி!

கொழும்பு, மே. 05

சிவனொளிபாதமலை யாத்திரை காலம் நிறைவடைந்த பின்னர் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மாத்திரமே அனுமதிக்கப்படுவார்கள் என சப்ரகமுவ மாகாண பிரதான சங்கைக்குரிய தேரர் பெங்கமுவே தம்மதின்ன தெரிவித்துள்ளார்.

நல்லதண்ணி பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

யாத்திரைக் காலம் நிறைவடைந்த பின்னர் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் சிவனொளிபாதமலைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும், அங்கு இடம்பெறும் சுற்றுச்சூழல் பாதிப்பை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளதாகவும் அவர் கூறினார்.

எதிர்வரும் விசாகப் பூரணை தினத்துடன் சிவனொளிபாத மலை யாத்திரை காலம் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சீன துணை நிதியமைச்சரை சந்தித்த செஹான் சேமசிங்க

கொழும்பு, மே. 05

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மற்றும் சீனாவின் துணை நிதியமைச்சர் லியோ மின் ஆகியோருக்கு இடையே சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 57ஆவது வருடாந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க ஜோர்ஜியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்த விஜயத்தின் ஒரு பகுதியாக குறித்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டத்துக்கு சீனா முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என அந்த நாட்டு துணை நிதியமைச்சர் குறிப்பிட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கூறியுள்ளார். (அ)

# கொலைக்கு உதவிய இளைஞன் ஐஸ் போதைப்பொருளுடன் கைது

வெணமுல்ல, மே 05

முன்னாள் பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் கொலைக்கு உதவிய 25 வயது இளைஞன் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் .

இவர் அம்பலாங்கொடை வெணமுல்ல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதுடன், 14 கிராம் 50 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டன.

மேலும் இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, கொலை செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் பரிசோதகர் பற்றிய தகவலை வழங்க அம்பலாங்கொடை பிரதேசத்திலிருந்து ரத்கமவுக்கு சென்றமை தெரியவந்தது.

அத்துடன், முன்னாள் பொலிஸ் பரிசோதகர் பயணித்த மோட்டார் சைக்கிளை பின் தொடர்ந்து அவரது வழித்தடத்தை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயலில் ஈடுபட்ட "சமன் கொல்ல' என்ற பிரதான சந்தேக நபருக்கு தொலைபேசி மூலம் தகவல் வழங்கியமையும் தெரிய வந்தது. (எ)

# போலி மருத்துவர்களைக் கண்டறிய பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை

கொழும்பு, மே 05

போலிச் சான்றிதழ்களைப் பயன்படுத்தி மருத்துவ நிலையங்களை நடத்தும் போலி மருத்துவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கிடையில் நடந்த விசேட கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் மருத்துவர்களுக்கு வழங்கப்படும் உத்தியோகபூர்வ அடையாளத்துடன் கூடிய ஸ்ரிக்கரை வாகனங்களில் ஒட்டி சிலர் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுகின்றனர்.

அத்துடன், சான்றிதழ்கள், தரமற்ற மருந்துகள், வாசனைத் திரவியங்கள் மற்றும் பல்வேறு வகையான அழகுசாதனப் பொருட்கள் விற்பனை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் பொலிஸார் கவனம் செலுத்தியுள்ளனர்.

போலிச் சான்றிதழ்களைப் பயன்படுத்தி மருத்துவ நிலையங்களை நடத்துபவர்கள் மற்றும் மருத்துவர்கள் போல் நடித்து சில சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சொத்துக்களை பயன்படுத்தி இலஞ்சம் கொடுக்கும் அரசாங்கம்

## பவ்ரல் பகிரங்க குற்றச்சாட்டு

கொழும்பு, மே 05



**வாக்காளர்களுக்கு இலஞ்சம் கொடுப்பதற்காக அரசாங்கம் அரச சொத்துக்களை பயன் படுத்துகின்றது என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் பகிரங்கமாக குற்றஞ் சாட்டியுள்ளது.**

நாட்டில் பிரதான தேர்தல்களுக்கு இன்னமும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசாங்கம் அரச சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்துகின்றது என்று அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு அரசாங்கம் பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது. வறிய மக்களுக்கு இலவசமாக அரிசி வழங்கும் திட்டம் மூலம் வரி செலுத்துவோரின் மில்லியன் கணக்கான பணம் வீணடிக்கப்படுகின்றது.

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு உள்ளூராட்சி பகுதிக்கும் அரசாங்கம் 10 மில்லியன் ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது. மாகாண ஆளுநரின் விருப்பத்தின்படி இந்த நிதி பயன்படுத்தப்படும். இது ஜனாதிபதித் தேர்தலை மையமாகக் கொண்ட நடவடிக்கை என்பது வெளிப்படையான விடயம்.

ஜூலை 31 ஆம் திகதிக்குள் இந்தத் திட்டங்களைப் பூர்த்தி செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். ஒகஸ்டில் ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியாகும். இதனால் அரசாங்கம் ஜூலை 31 ஆம் திகதிக்குள் இந்தத் திட்டங்களைப் பூர்த்தி செய்ய விரும்புகின்றது எனவும் ரோஹண கூறினார். (எ)

6, 7 ஆம் திகதி சுகவீன விடுமுறை

# கிராம உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு, மே 05

கிராம உத்தியோகத்தர்கள் 6 ஆம் மற்றும் 7 ஆம் திகதிகளில் சுகவீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக கிராம சேவையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கிராம உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பல பிரச்னைகளுக்கு உடனடி தீர்வு காணக் கோரி இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் போதுமானதாக இல்லை எனவும் பல தடவைகள் உயர் அதிகாரிகளிடம் தெரிவித்தும் இதுவரை எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

கிராம உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் எனவும், தற்போதைய நிலைமைக்கு ஏற்றவாறு கிராம உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளை விரைவில் அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (எ)

# அனுமதி இன்றி சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு ரூ. 5 இலட்சம் அபராதம்!

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானம்

கொழும்பு, மே 05

வீதி அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் பயணிகளை ஏற்றிச்செல்லும் பஸ்களுக்கான அபராதத்தை 5 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதற்கான வரைவு திட்டம் போக்குவரத்து அமைச்சால் சட்டவரைஞர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

3, 200 தொலைதூர சேவை பஸ்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஒழுங்குமுறையின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

மேலும், பயணிகள் பெரும்பாலும் வீதி அனுமதிப்பத்திரம் இல்லாத பஸ்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றர்.

குறிப்பாக, வெள்ளவத்தை மற்றும் மருதானையை அண்மித்த பகுதிகளில் வீதி அனுமதிப்பத்திரம் இல்லாத பஸ்கள் நிறுத்தப்பட்டு சட்டவிரோதமான முறையில் பயணிகள் ஏற்றிச் செல்லப்படுகின்றனர்.

இவ்வாறான பல பஸ்களின் சாரதிகளைக் கைது செய்து வழக்குத் தொடர தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்படும் பஸ் சாரதிகளுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு எச்சரித்துள்ளது. (எ)

# ஒரு கிலோ தக்காளி 50 ரூபாய்! திடீரென சரிந்த மரக்கறி விலை


கண்டி, மே 05


கண்டி மெனிக்கும்புர பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று மரக்கறிகளின் விலைகள் திடீரென சரிவடைந்தன.

இதன்படி, ஒரு கிலோ கரட் 130 , ஒரு கிலோ கத்தரிக்காய் 150, ஒரு கிலோ பீன்ஸ் 180, ஒரு கிலோ பச்சை மிளகாய் 100, ஒரு கிலோ லீக்ஸ் 200, ஒரு கிலோ முட்டைக்கோஸ் 80, ஒரு கிலோ தக்காளி 50 ரூபாயாகவும் குறைவடைந்தன.

இதேவேளை, ஒரு கிலோ பீட்ரூட் 170, ஒரு கிலோ கறி மிளகாய் 200, ஒரு கிலோ பீர்க்கங்காய் 220, ஒரு கிலோ வெண்டைக்காய் 80, ஒரு கிலோ பூசணிக்காய் 60, ஒரு கிலோ முள்ளங்கி 40, ஒரு கிலோ தேசிக்காய் 1100 ரூபாயாகவும், ஒரு கிலோ இஞ்சி 2400 ரூபாயாகவும் குறைவடைந்தன. (எ)

# முல்லைத்தீவில் கருகும் பயிர்கள் வறட்சியால் விவசாயிகள் பாதிப்பு





முல்லைத்தீவு, மே 05

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது நிலவும் கடும் வெப்ப நிலை காரணமாக சிறிய நீர்ப்பாசனக் குளங்களில் நீர்வற்றிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கைகள் வறட்சியால் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக முள்ளியவளை தெற்கு, முள்ளியவளை மத்தி கமக்கார அமைப்புக்களின் கீழுள்ள தொத்தி மோட்டை மற்றும், தேன்தூக்கி ஆகிய சிறிய நீர்ப்பாசனக் குளங்களில் நீர் வற்றிப்போயுள்ளது.

இதனால் குறித்த சிறிய நீர்ப்பாசனக்குளங்களின் கீழ் உள்ள 12 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை நீர் இன்றி வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சில விவசாயிகள் தமது நெற் செய்கையைக் காப்பாற்றும் நோக்கில் கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேவேளை, உரிய தரப்பினர் பாதிக்கப்பட்டுள்ள தமது நெற் செய்கையைப் பார்வையிட்டு பாதிப்புக்களுக்குரிய நஷ்டஈடுகளை வழங்குவதுடன், குறித்த சிறிய நீர்ப்பானக் குளங்களை ஆழப்படுத்தி மறுசீரமைப்புச்செய்து தரவேண்டுமென்பதே விவசாயிகளின் கோரிக்கையாக வுள்ளது.

இதுதொடர்பில் முள்ளியவளை கமநலசேவைநிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் பேரம்பலம் தயாரூபன் தெரிவிக்கையில்,

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அதிகரித்த வெப்பத்துடன்கூடிய காலநிலை மாற்றம் காரணமாக தொத்திமோட்டை மற்றும், தேன்தூக்கி ஆகிய நீர்ப் பாசனக் குளங்களில் நீர்வற்றிப்போயிருப்பதனால் அக்குளத்தின் கீழ் செய்கைபண்ணப்பட்டுள்ள நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கமநல அபிவிருத்தித் திணைக்கள நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் குறித்த குளங்களை ஆழப்படுத்தி, குளத்தில் நீரை அதிகம் சேமிக்கக்கூடியவாறு எம்மால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அத்தோடு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கமநல காப்புறுதிச்சபையூடாக நஷ்டஈடுகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென வும் அவர் கூறினார். (எ)

# சைவப்புலவர் பரீட்சைக்கான திகதி அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 05

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்படும் 2024 ஆம் ஆண்டுக்கான இளஞ் சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் இம் மாதம் 24, 25, 26 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் செ. த. குமரன் அறிவித்துள்ளார்.

24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு உரைநடை, பிற்பகல் 2 மணிக்கு வரலாறு, 25 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இலக்கியம், பிற்பகல் 2 மணிக்கு இலக்கணம், 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு சாத்திரம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

இந்த பரீட்சைகள் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி ஆகிய பரீட்சை நிலையங்களில் இடம்பெறவுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் இம் மாதம் 2 ஆம் வாரம் தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் செயலாளர் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
05.09.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஒரு வரலாற்று நெருக்கடியை எதிர்கொள்ளுதல்

பொருளாதார மறுசீரமைப்பிற்காக, இலங்கை அரசாங்கம் தற்போது முன்னெடுத்துவரும் திட்டங்களை, தடையின்றி தொடர்ந்தால், நாட்டில் நெருக்கடி நிலைமை ஏற்படாது - என்று, அமெரிக்க திறைசேரியின் உதவிச் செயலர் தெரிவித்திருக்கின்றார். மேலோட்டமாக நோக்கினால், தினமும் நாம் கடந்துசெல்லும் சாதாரண செய்தி போன்றதுதான் இதுவும் - ஆனால் ஆழமாக நோக்கினால் இதிலுள்ள ஆபத்தை உணரலாம். இலங்கை தொடர்பான சர்வதேச பார்வை என்ன என்னும் கேள்விக்கு, இதில் பதிலுண்டு. அதாவது, இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள ஒரேயொரு பிரச்னை பொருளாதார பிரச்னை மட்டும்தான். இலங்கை தொடர்பான சர்வதேச அபிப்பிராயம் இதுதான். ஆனால் விடயங்களை பின்நோக்கி பார்த்தால், யுத்தத்திற்கு பின்னர் உச்சரிக்கப்பட்ட சொற்கள் அனைத்தும் மெதுவாக காணாமல் போவதை நாம் காணலாம் - மெதுவாக காணாமல் போய் கொண்டிருக்கும் சொற்கள் அடுத்தகட்டமாக காலாவதியாகப் போகின்றன. அவை காலாவதியாவதை தடுப்பதற்கு தமிழர் தரப்புக்கள் என்ன செய்யப் போகின்றன?

தமிழ் தேசிய அரசியல் பரப்பில் தங்களை முன்னிலைப்படுத்திவரும், அனைத்து தரப்புக்களும் இணைந்து, இதற்கான கூட்டுப் பதிலை காண வேண்டும். இலங்கைத் தீவின் பொருளாதார பிரச்னைக்குள் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னை காணமால் போவதை அனுமதிக்கப் போகின்றீர்களா - அல்லது, தமிழ் மக்களின் பிரச்னைகள் அப்படியே இருக்கின்றன, ஓரின மேலாதிக்க நிகழ்சிநிரலே நாட்டில் இருக்கின்றது - தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாத கண்கொண்டு நோக்கிய, சர்வதேச சக்திகள், ஜனநாயக வழிமுறையில் தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வை முன்வைக்குமாறு இலங்கை அரசிற்கு உரிய அழுத்தங்களை வழங்கவில்லை - என்னும் செய்திகளை, தமிழ் மக்களுக்காக வேறு எவருமே கூறப்போவதில்லை - அதனை தமிழ் மக்கள்தான் கூற வேண்டும்.

தமிழர் தரப்புக்கள் இதனை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன? இதற்கான பதிலாகவே, ஜனாதிபதி தேர்தலை ஒரு வாய்ப்பாக பயன்படுத்துவது தொடர்பான உரையாடல்கள் தீவிரமடைந்திருக்கின்றன. ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தி, தேர்தலை எதிர்கொள்வதன் ஊடாக, முதல் செய்தியில், தமிழ் மக்கள் ஓரின அரசியல் நிகழ்சிநிரலுக்குட்பட்ட ஜனாதிபதி தேர்தலில் பங்குகொள்ள விரும்பவில்லை - அதே வேளை, ஜனநாயக முறைமையையும் நிராகரிக்கவில்லை என்னும் முதல் செய்தியுடன், இரண்டாவதாக, தேர்தலில் பங்குபற்றுவதன் ஊடாக, ஜனநாயக வழிமுறையில் தமிழ் மக்களின் அபிலாசைகளை உலகின் முன்னால் எடுத்துரைக்கின்றனர்.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழலாம் - இன்னும் உலகிற்கு கூற என்ன இருக்கின்றது? அதுதான் ஏற்கனவே போதியளவு கூறியாகிவிட்டதே! - தர்க்கரீதியில் கேள்வி சரியானதாக இருக்கலாம் - ஆனால், இதற்கு மாறாக, தேர்தலை பகிஷ்கரிப்பதாலோ அல்லது ஓரின அரசியலை முன்வைக்கும் வேட்பளார் ஒருவரை ஆதரிப்பதன் ஊடாகவோ, இந்தப் பிரச்னையை எவ்வாறு எதிர்கொள்ள முடியும்?

நிச்சயம் முடியாது. யுத்தத்திற்கு பின்னரான மூன்று ஜனாதிபதி தேர்தல்களின் போதும் தமிழ் மக்கள் தென்னிலங்கை கட்சிகளின் வேட்பாளர்களையே ஆதரித்திருந்தனர்- இதனால் என்ன நிகழ்ந்தது? ஒன்றுமில்லை. ஆனால் இப்போது முன்னரைவிடவும் ஆபத்தான அரசியல் சூழலொன்றை, தமிழ் மக்கள் எதிர்கொண்டிருக்கின்றனர் - அதாவது, தமிழ் மக்களுக்கு பிரத்தியேக பிரச்னை என்று ஒன்றில்லை என்றவாறான பிரசாரமே முன்னெடுக்கப்படுகின்றது. கோட்டாபய ராஜபக்ஷ நேரடியாக முன்னெடுத்தது, தற்போது மறைமுகமாக முன்னெடுக்கப்படுகின்றது. ஜனாதிபதி தேர்தல் முடிவுற்றதும், இந்த அடிப்படையிலேயே சர்வதேச ரீதியான அபிப்பிராயமும் நிலைபெறப் போகின்றது. அதனை எதிர்கொள்ள வேண்டுமாயின், தேர்தலில் தமிழ் மக்கள் பங்குகொண்டு, தமிழ் மக்களின் பிரச்னையை பேசுபொருளாக்க வேண்டும். இது இலங்கைத் தீவிற்கும், இலங்கைத் தீவில் தலையீடு செய்யும் பிராந்திய மற்றும் மேற்குலக சக்திகளுக்கும் ஒரு தெளிவான செய்தியை சொல்ல வேண்டும் - அதாவது, நாங்கள் பிரச்னைகளோடு இருக்கின்றோம் - நீங்கள் இதுவரையில் உச்சரித்த சொற்கள் எவையும் எங்களுடைய பிரச்னைகளை தீர்க்கவில்லை. இதுதான் உங்களின் ஜனநாயகத்தின் எல்லையா? தமிழ் பொது வேட்பாளர் ஒருவரின் ஊடாக, இந்தக் குரல் வெளியில் வரவேண்டும்.

# 'உறுமய' திட்டம் போன்று உலகில் எங்கும் இல்லை

### ஜனாதிபதி ரணில் பெருமிதம்

பொலநறுவை, மே 05

**உலகில் எந்தவொரு நாட்டிலும் இவ்வாறான வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.- இவ்வாறு 'உறுமய' திட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருமிதமாக தெரிவித்துள்ளார்.**



மக்களுக்கு காணி உரிமையை வழங்க அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை புரட்சிகரமான வேலைத்திட்டம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பொலநறுவை மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று நடந்த "உறுமய" திட்டத்தின் கீழ் மகாவலி குடியிருப்பில் வசிப்பவர்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (எ)

## நீரில் மூழ்கி ஒருவர் பலி!

கொழும்பு, மே. 05

நுவரெலியா ஹங்குரங்கெத்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அதிகாரிகம பிரதேசத்தில் உள்ள அம்பேவளை ஓயாவில் நீராடச் சென்ற நபரொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக ஹங்குரனங்கெத்த பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பேவளை பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று முன் தினம் மாலை நபரொருவருடன் அம்பேவளை ஓயாவுக்கு நீராடச் சென்றுள்ள நிலையில் திடீரென நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் ரிகில்லகஸ்கட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## வீடு தீக்கிரை

கண்டி, மே 05

கண்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தல்வத்த பிரதேசத்தில் வீடு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தால் அவ்வீடு கடும் சேதத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இத் தீ விபத்தால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. இருப்பினும் பெரும் பொருள் சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினார். (எ)

## இரத்ததானம்

யாழ்ப்பாணம், மே 05

யாழ்ப்பாணம் - குருநகர் ஜேம்ஸ் வோரியர்ஸ் முன்னேற்ற கழகத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜேம்ஸ் வோரியர்ஸ் இளைஞர் கழகம் நடத்தும் இரத்த தான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## போதைப்பொருட்களுடன் ஒரே நாளில் 734 பேர் கைது

கொழும்பு, மே 05

நாடளாவிய ரீதியில் நேற்றுக் காலை 9 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது நச்சுத்தன்மைமிக்க போதைப்பொருட்களுடன் 14 பெண்கள் உட்பட 734 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் 26 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 5 பேர் புனர்வாழ்வு நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 127 கிராம் ஹெரோயின்,191 கிராம் ஐஸ், 460 கிராம் கஞ்சா, 07 கிராம் ஹெரோயின், 35 கிராம் ஐஸ் மற்றும் 353 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. (எ)

## பொலிஸ் பொறுப்பதிகாரி மீது மூர்க்கத்தனமான தாக்குதல்!

மஹியங்கனை, மே 05

பதியத்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கடும் தாக்குதலுக்குள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பதியத்தலாவ, சரணகம பிரதேசத்தில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறில் மற்றைய தரப்பினர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியைத் தாக்கியதாக தெரியவருகிறது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த நிலைய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிகிச்சைக்காக பதுளை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் தற்போது தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியைத் தாக்கிய நபர் ஒருவர் மஹி



யங்கனை பொலிஸில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹியங்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமதம் என்னும் தற்கொல்லி நோய்

கிருங்கை சேதுபதி

கண்ணுக்குப் புலனாகாத காலத்தை முன்னிறுத்திக் கடமையாற்றும் பணிகளில் தீவிரம் கொண்ட மனிதகுலம் கண்டுபிடித்த கருவிகளுள் மகத்தானவொன்று கடிகாரம். அதுபோல், நாளையும் மாதத்தையும் நிரல்படுத்திக் காட்டிச் செயலாற்றத் தூண்டும் வகையில் உருவாக்கப்பட்டவை காலண்டர்கள்.

நகர்ந்து விரைந்த நாட்களின் மீது செயல்களை எழுதிய சிறுகுறிப்புகளைத் தாங்குதற்கென்றே தயாரிக்கப்படுபவை டைரிகள்.

எல்லாமும் காலத்தைக் கணித்துத் திட்டமிடவும் செயல்படவும் உதவுகிற கருவிகள். அதிலும் குறிப்பாக, கடிகாரமானது காலக்கணிப்பானே ஒழிய, காலத்தைக் கட்டுப்படுத்துகிற கருவி ஆகாது என்பதைப் பல சமயங்களில் மறந்துவிடுகிறோம்.

அலாரம் வைத்து முன் எழுப்பவும், அடுத்தடுத்த பணிகளைத் திட்டமிட்டு முடிக்கவும் உதவுகிற இக்கருவியையும் உள்ளடக்கி வந்திருக்கும் கைப்பேசி, காலத்தை விழுங்கும் கருவியாகவும் ஆகிவிட்டிருக்கிறது.

விதவிதமான வண்ணங்களில், வடிவங்களில் காட்சிகளை முன்விரித்து, நம் எண்ணத்தையும் இயக்கத்தையும் முடக்கிப் போடும் இந்தக் கருவி, சுய சிந்தனை விரிப்பிற்கும் செயலூக்கத் திறனுக்கும் முட்டுக்கட்டையாகி விடுகின்றது. காலப்போக்கில், அந்தக் கருவிக்குத் தீனி போடுகிற, அதற்கே தீனியாகிவிடுகிற தன்மையை நமதாக்கிவிடுகிறது.

யாராலும் தடுத்து நிறுத்த முடியாதவண்ணம் தன்போக்கில் சீராகப் போய்க் கொண்டிருக்கும் பொழுதுகளை முன்னிறுத்திப் பொழுதுபோக்குச் சாதனங்கள் ஆக்கப்பட்டதன் நோக்கம், வீணே பொழுதுகளைப் போக்குதற்கு அல்ல.

காலத்திற்குரிய கடமைகளைப் புரிந்து களைத்துப் போகும்போது, ஓய்வு நேரத்து உற்சாகத்திற்காக உருவாக்கப்பட்டவை அவை. கலை, இலக்கிய வடிவங்களில் தகவமைத்துக் கொள்ளும் நிகழ்வுகளை, எளிதாக நுகர உருவாக்கப்பட்டவைதான் காட்சி, கேள்வி ஊடகங்கள்.

அவற்றின்வழியே மனித மாண்புகளையும் புனித உணர்வுகளையும் புத்துயிர்ப்பாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே நோக்கம். 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்கிற நிலையில், கண்ட கண்டவற்றையெல்லாம் காட்டிச் செல்லும் அண்மைக்காலக் கருவிகளால் நம் காலம் போகிறது. காலத்தோடு நம் ஆயுளும் கரைகிறது. இந்த உண்மை தெரிந்தும் புத்தியில் உறைக்காமல் போய்க்கொண்டிருக்கிறபோது, இழுத்துத் தடுத்து நிறுத்த இலக்கியம் அல்லாமல் வேறு இல்லை என்பதை உரத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது.

'நாள் என ஒன்றுபோல் காட்டி உயிர் ஈரும் வாள்' என்று திருக்குறள் சொல்கிறது. நாளும் விடிகிற பொழுதில் கிழிக்கப்படுகிற நாட்காட்டி (தினசரி காலண்டர்)த் தாளை, அது வாளாக்கிக் காட்டுகிறது. கிழிக்கப்பட்டது தாள் அல்ல, நம் வாழ்வில் ஒரு நாள் என்று உணர்த்திக் காட்டுகிறது.





'காலத்தோடு போக வரவில்லை. காலத்தைப் போக்கவும் வரவில்லை. காலகாலத்திற்கு நிலைத்து நிற்கும் காரியம் ஆற்றப் பிறந்தவர்கள் நாம்' என்ற கடப்பாட்டை அறிவுறுத்தும் வரலாற்று நாயகர்களின் வாழ்வியல் நூல்கள் நம்மைக் காலத்தோடு இயங்கவைப்பவை.

பல நூல்களையும் படித்து உள்வாங்கிக் கொள்ளும் அவகாசம் இல்லாத நிலையில்தான், பலரது உரைகளைச் செவிமடுக்கிறோம். அவர்களது சொற்களின் சாரம், செயல்களில் தீரமாக வெளிப்பட்டாக வேண்டும். அவர்களால்தான் பல செயல்வீரர்கள் உலக அளவில் தோன்றி மனித குலத்தை முன்னேற்றியிருக்கின்றார்கள். இன்றைக்கோ, சிந்திப்பதற்குரிய செய்திகளை விடுத்துச் சிரிப்பதற்கான தகவல்களைப் பொறுக்கி எடுத்து, அடுக்கி உரைக்கிற கவர்ச்சிக்கு இலக்காகிக் காலத்தை இழக்கிறோம்.

அதனால், எதையும் பிறகு பார்க்கலாம் என்று தள்ளிப்போடுகிற பழக்கம், வழக்கமாகி, நம் வாழ்வையும் பின்னுக்குத் தள்ளிவிடுகின்றது. நாம் பின் தங்கிப் போய் விடுகிறோம். காலம் முன்னேகிவிடுகிறது. கடைசியில் காலத்தால் ஆற்ற வேண்டிய கடமைகள் தேங்கிவிடுகின்றன. நாம் கடமைகள் செய்யத் தவறிய குற்றவாளிகள் ஆகிவிடுகின்றோம்.

எத்தனை முயன்றாலும் ஈடுகட்ட முடியாத இழப்பு கால இழப்பு என்பதை இன்னமும் நாம் உள்வாங்கவில்லை என்பதே உண்மை. 'காலம் பொன் போன்றது'

(14ம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 05.05.2024 - 11.05.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 17
நல்ல நேரம்: 7.30 - 08.30 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : துவாதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எதிர்பார்த்த இனங்களில் இருந்து தன வருமானம் தாராளமாக இருக்கும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் தாமதப்படலாம். பெற்றோரின் உடல் நிலையில் அக்கறை எடுத்தல் அவசியம். பிறமொழி பேசும் பெண்களின் நட்பினால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். எதிர்கால தொழில் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்களில் முதலீடுகள் செய்வது முன்னேற்றத்தைத் தரும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். அன்னையின் அன்பும் அரவணைப்பும் மகிழ்ச்சி தரும். உறவுகளுடன் சென்று மகான்கள் தரிசனம் செய்து மகிழ்வார்கள். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற மிகுந்த அக்கறையுடன் படித்தல் அவசியம். அரசு பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வு கிடைக்கும். பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் இறங்கித் தொழில் முன்னேற்றம் காண முயல்வீர்கள்

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர் கள். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமைவதோடு, புத்திர பாக்கியம் ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். முயற்சிகளில் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். ஆடம்பரச் செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் செல்வாக்கு மிக்க நபர்கள் உதவியால் உங்கள் பொருளாதார நிலைகள் உயர்ந்து வலுப்பெறும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். இடைவிடாத கடின உழைப்பின் காரணமாக நேரத்துக்கு உணவு அருந்த முடியாத நிலை ஏற்படலாம். அரசு வகையில் கட்ட வேண்டிய தீர்வைகள், வரி பாக்கிகள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கு தேவையான பண உதவிகள் கிடைக்கும். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் உங்கள் செயல்திறன் கூடும். பலவழிகளிலும் வெற்றி மேல் வெற்றி வரும். சிலருக்குப் புதிய வாகன யோகம் ஏற்படும். வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற. வெற்றிகரமாக நடக்கும். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருந்தால் விபத்தினைத் தவிர்க்கலாம். கவனம் தேவை. நீங்கள் எப்போதும் பணம் விஷயமான சிந்தனையுடன் இருப்பார்கள். சேமிப்புக்கள், பங்குச் சந்தை ஆகியவற்றில் முதலீடு செய்வது நல்லது.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிக்கிறார்கள். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் வந்து சேரும். நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுஏற்படும். பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெறும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் இனிய பயணங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும். மனைவி, புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். புது புது முயற்சியில் ஈடுபட்டு நல்ல வேலையில் சேரும் யோகம் ஏற்படும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். அன்புக்கு இனியவர்களால் உங்கள் கண்ணீர் துளிகள் துடைக்கப்படும். சோம்பல் அகற்றி சுறுசுறுப்பு இருப்பது நல்லது. பிறரால் கவனிக்கப்பட்டு.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி அடைவீர்கள். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய வீடு அமையும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்கள் நன்கு படித்து தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறுவார்கள். சொந்த பந்தங்களுக்கிடையே ஒற்றுமை மேலோங்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதின் மூலம் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும். நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் இராது. சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். சினத்தை அடக்கினால் சிரமங்கள் குறையும். உடன் பிறந்தவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. சிலருக்கு பணமுடை ஏற்படுவதோடு, தேவையற்ற அலைச்சல்களும் ஏற்படும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் சம்பாதிக்கும் திறன் மேம்படும். பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். அன்னையின் அன்பு அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மூலம் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். ஊழியர்கள், குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பால் அகம் மகிழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுல் காந்தி ரேபரேலி தொகுதியில் போட்டியிடுவது ஏன்? வரலாறு சொல்வது என்ன?



உத்தரப்பிரதேசத்தின் ரேபரேலி மற்றும் அமேதி தொகுதிகளில் போட்டியிடுவதற்கான காங்கிரஸ் வேட்பாளர்களை அக்கட்சி வெள்ளிக்கிழமை காலை அறிவித்துள்ளது.

இதில் திடீர் திருப்பமாக ரேபரேலி தொகுதியில் ராகுல் காந்தி போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த தொகுதியில் வேட்பு மனுத்தாக்கல் செய்ய இன்றே மே 3 கடைசி நாளாகும்.

ரேபரேலி தொகுதியில் ராகுல் காந்தி போட்டியிடுவது இதுவே முதல் முறையாகும். அவரை எதிர்த்து பாஜக தரப்பில் தினேஷ் பிரதாப் சிங்போட்டியிடுகிறார்.

கடந்த மக்களவைத் தேர்தலில் சோனியா காந்தியை எதிர்த்து களமிறங்கிய இவர் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

இந்த தொகுதியில் 2004 முதல் 2024 வரை கிட்டத்தட்ட 20 வருடங்களாக சோனியா காந்தியே மக்களவை உறுப்பினராக இருந்து வருகிறார்.

ஆனால் இந்த முறை அவர் மாநிலங்களவை உறுப்பினராக தேர்வாகியுள்ள நிலையில், ரேபரேலி தொகுதியில் போட்டியிடவில்லை.

அதேபோல், வழக்கமாக ராகுல் காந்தி போட்டியிடும் அமேதி தொகுதியில் இந்த முறை கிஷோரி லால் சர்மாவை காங்கிரஸ் களமிறக்கியுள்ளது. அவருக்கு எதிராக பாஜக சார்பில் ஸ்மிருதி இராணி போட்டியிடுகிறார். கடந்த முறை அமேதியில் ராகுல் காந்தியை தோற்கடித்து ஸ்மிருதி இராணி வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த முறை அமேதி அல்லது ரேபரேலி ஆகிய ஏதாவது ஒரு தொகுதியில் பிரியங்கா காந்தி போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், வேட்பாளர் பட்டியல் அந்த ஊகங்களை பொய்யாக்கியுள்ளது.

அமேதி தொகுதியில் கிஷோரி லால் ஷர்மா போட்டியிடுவது குறித்து தனது சமூக வலைதளத்தில் கருத்தை பகிர்ந்திருந்த பிரியங்கா காந்தி, 'எங்களது குடும்பத்திற்கும், கிஷோரி லால் சர்மாவுக்கும் பல ஆண்டுகளாகவே உறவு நீடித்து வருகிறது. அவர் எப்போதும் அமேதி மற்றும் ரேபரேலி மக்களுக்கு சேவை செய்வதில் முழு மனதுடன் ஈடுபட்டுள்ளார். சமூக சேவையின் மீது அவருக்குள்ள ஆர்வமே அதற்கு ஒரு எடுத்துக்காட்டு" என்று கூறியுள்ளார்.

மேலும், "இன்று காங்கிரஸ் கட்சியால் அமேதி வேட்பாளராக கிஷோரி லால் அறிவிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. கிஷோரி லால் ஜியின் விசுவாசமும், அர்ப்பணிப்பும் அவருக்கு இந்தத் தேர்தலில் வெற்றியைத் தேடித்தரும்" என்று கூறியுள்ளார் பிரியங்கா.

**ராகுல் காந்தியும், அமேதி தொகுதியும்**

2004 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து அமேதி தொகுதியில் மக்களவை உறுப்பினராக வெற்றி பெற்று வந்த ராகுல் காந்தியை, 2019ஆம் ஆண்டு தேர்தலில் தோல்வியடையச் செய்தார் பாஜகவின் ஸ்மிருதி இராணி. ஆனாலும், கேரளாவின் வடநாடு தொகுதியில் கிடைத்த வெற்றியின் மூலம் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்தார் ராகுல்.




அதேபோல் இந்த முறையும் இரண்டு தொகுதிகளில் போட்டியிடும் ராகுல் காந்தி, வயநாடு மற்றும் ரேபரேலி தொகுதிகளில் போட்டியிடுகிறார்.

1999ஆம் ஆண்டுக்கு பிறகு காந்தி குடும்பத்தைச் சேர்ந்த நபர்கள் அமேதி தொகுதியில் போட்டியிடாதது இதுவே முதல்முறையாகும். சோனியா காந்தியும் கூட 1999 ஆம் ஆண்டு அமேதி தொகுதியில் இருந்து தான் அரசியலுக்கு வந்தார்.

அதன்பிறகு, 2004 ஆம் ஆண்டில் நடந்த மக்களவைத் தேர்தலில், ரேபரேலி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் சோனியா காந்தி.

அதே ஆண்டு அமேதி தொகுதியில் போட்டியிட்ட ராகுல் காந்தி மக்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2019 ஆம் ஆண்டைத் தவிர, 1977 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளிலும் அமேதி தொகுதியில் காங்கிரஸ் தோல்வியடைந்துள்ளது. ஆனால், இந்த இரண்டு முறையும் காங்கிரஸ் சார்பில் தேர்தலில் காந்தி குடும்பத்தை சேர்ந்தவர்கள் போட்டியிடவில்லை.



**அமேதி மற்றும் ரேபரேலியின் வரலாறு**

அமேதி மற்றும் ரேபரேலி தொகுதிகள் காந்தி குடும்பத்திற்கே உரித்தான இடங்களாக கருதப்படுகின்றன. 1952 மற்றும் 1957 ஆம் ஆண்டுகளில் ரேபரேலியில் இருந்து தான் பெரோஸ் காந்தி மக்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் இதே தொகுதியில் 1967 இல் போட்டியிட்ட இந்திரா காந்தி மக்களவைக்கு தேர்வு செய்யப்பட்டார்.

மீண்டும் 1971ஆம் ஆண்டில் ரேபரேலியில் இந்திராகாந்தி வெற்றி பெற்றிருந்தாலும், அவசர நிலைக்கு பிறகு 1977 தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

ஆனால், 1980ல் நடந்த தேர்தலில் இதே ரேபரேலி தொகுதியில் மீண்டும் வெற்றிபெற்றார் இந்திரா காந்தி. அதே சமயம் இந்த தேர்தலில் ஆந்திராவின் மேடக் தொகுதியிலும் அவர் வெற்றி பெற்றார்.

1980இல் இருந்துதான் அமேதி தொகுதியில் காந்தி குடும்பத்தின் அரசியல் பயணம் தொடங்கியது. சஞ்சய் காந்தி இங்கிருந்துதான் மக்களவைக்கு தேர்வு செய்யப்பட்டார். அவரது மறைவுக்கு பிறகு 1981ஆம் ஆண்டு இதே தொகுதியில் இருந்து மக்களவைக்கு சென்றார் ராஜீவ் காந்தி.

அதற்கு பின் அவர் இறக்கும் வரை இதே தொகுதியில் தொடர் வெற்றிகளை பெற்று மக்களவை உறுப்பினராக நீடித்து வந்தார் அவர்.

இதில் 1991 முதல் 1999 ஆம் ஆண்டு வரை இந்த தொகுதியில் காந்தி குடும்பத்தை சேர்ந்த உறுப்பினர்கள் யாரும் போட்டியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிஷோரி லால் சர்மா யார்?

அமேதியில் களமிறங்கியுள்ள கிஷோரி லால் சர்மா, நேரு குடும்பத்துக்கு நெருக்கமானவராகக் கருதப்படுகிறார்.

காங்கிரஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர், தன்னைப்போன்ற ஒரு சிறு தொழிலாளிக்கு தங்களுடைய குடும்ப தொகுதியின் பொறுப்பையே வழங்கும் கார்கே, ராகுல், சோனியா மற்றும் பிரியங்கா ஆகியோருக்கு நன்றி என்று கூறியுள்ளார் கிஷோரி லால் சர்மா.

மேலும், இந்த வாய்ப்பை பயன்படுத்தி தன்னால் முடிந்த சிறப்பான பணியை செய்வேன் என்று கூறியுள்ள அவர், "1983ஆம் ஆண்டு இளைஞர் காங்கிரஸ் ஊழியராக இங்கு வந்தேன். ராஜீவ் காந்திதான் என்னை அழைத்து வந்தார். அன்றிலிருந்து இங்குதான் பணியாற்றி வருகிறேன்" என்று கூறினார்.

"சோனியா ஜியை அனைத்து தேர்தல் களிலும் போட்டியிட செய் தோம். 1981ஆம் ஆண்டை தவிர மற்ற அனைத்து சூழல் களிலும் ராஜீவ்ஜியோடு இணைந்து பணியாற்றியுள் ளோம்" என்று கூறியுள்ளார் அவர்.

இப்போது ராகுல் காந்தி போட்டியிலிருந்து வெளியேறிவிட்டாரா என்று கேள்வியெழுப்பிய போது, "இல்லை, அவர் ஒட்டுமொத்த நாட்டிற்குமான போட்டியில் களம் கண்டுள்ளார்" என்றார் கிஷோரி லால் சர்மா.

இவர் வெள்ளி தனது வேட்புமனுதாக்கலை சமர்ப்பிக்க இருந்தார். கிஷோரி லால் சர்மா ரேபரேலி தொகுதியில் சோனியாவின் பிரதிநிதியாக இருந்து வந்தவர்.

ஹிந்துஸ்தான் டைம்ஸ் இதழின் செய்தி அறிக்கையின்படி, அமேதி மற்றும் ரேபரேலி தொகுதிகளில் காந்தி குடும்ப தொடர்பான விவகாரங்களுக்கு கிஷோரி லால் சர்மாவே தொடர்பு புள்ளியாம்.

உண்மையில் பஞ்சாபை சேர்ந்த இவர், 1983ஆம் ஆண்டு காங்கிரஸ் ஊழியராக இந்த தொகுதிக்கு வந்துள்ளார். இவர் ராஜீவ் காந்திக்கு மிக நெருக்கமானவர் என்றும் கூறப்படுகிறது.

ராஜீவ் காந்தி இறப்புக்கு பிறகு, இவர் தொடர்ந்து அமேதி தொகுதியில் பணியாற்றி வந்துள்ளார். குறிப்பாக 1990களில் காந்தி குடும்பம் இந்த தொகுதியில் இருந்து விலகியிருந்த காலகட்டத்தில் இவர் மிகத்தீவிரமாக பணியாற்றியுள்ளார்.

1999ஆம் ஆண்டு சோனியா காந்தி போட்டியிட்ட முதல் தேர்தலில் கிஷோரி லால் சர்மா முக்கியமான பாத்திரம் வகித்ததாக கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதினப் பேரணிகளின் அரசியல் அர்த்தங்கள்



வீரகத்தி தனபாலசிங்கம்

சர்வதேச தொழிலாளர் தினக் கொண்டாட்டங்கள் அவற்றின் உண்மையான அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் இழந்து நீண்டகாலம் சென்றுவிட்டது. தொழிலாளர்கள் தங்களது உரிமைகள் பலவற்றை வென்றெடுத்த கடந்த காலப் போராட்டங்களை நினைவுகூர்ந்து கௌரவிக்கவும் சமத்துவமானதும் மனிதாபிமானமுடையதுமான ஒரு சமுதாயத்தை தோற்றுவிப்பதற்கான போராட்டத்தைத் தொடருவதற்கான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தவும் மேதினக் கொண்டாட்டங்களை பயன்படுத்துவதே பாரம்பரியமாக இருந்துவந்தது.

ஆனால், இன்று மேதினம் பெரும்பாலும் அரசியல் கட்சிகள் அவற்றின் செல்வாக்கை வெளிப்படுத்துவதற்கு வருடாந்தம் கேளிக்கைகளுடன் கூடிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான ஒரு தினமாக மாறிவிட்டது. இலங்கை தேசிய தேர்தல்களை எதிர்நோக்கியிருக்கும் நிலையில் கடந்த புதன்கிழமை அரசியல் கட்சிகள் அவற்றின் பலத்தை வெளிக்காட்டுவதற்கு மேதினக் கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்திருந்தன.

இலங்கையில் அண்மைய தசாப்தங்களாக கட்சித் தொண்டர்களின் கட்டுக்கோப்பான அணிவகுப்புடன் கூடிய ஒழுங்கமைவான மேதின ஊர்வலங்களையும் பேரணிகளையும் ஜனதா விமுக்தி பெரமுனவே (ஜே.வி.பி.) நடத்திவந்திருக்கிறது. இந்த தடவையும் அவர்களின் மேதினம் மக்கள் வெள்ளத்துக்கு மத்தியில் பெரும் எடுப்பில் அமைந்திருந்தது.

முன்னரைப் போலன்றி தற்போது தேசிய மக்கள் சக்தி என்ற புதிய அவதாரத்துடன் ஜே.வி.பி. நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளின் வரிசையில் வந்துவிட்டது போன்று தோன்றுகிறது.


பாரம்பரிய பிரதான அரசியல் கட்சிகளாக விளங்கிய ஐக்கிய தேசிய கட்சியும் சிறிலங்கா சுதந்திர கட்சியும் அமைப்பு ரீதியான கட்டுக்கோப்பையும் மக்கள் ஆதரவையும் பொறுத்தவரை சிறிய கட்சி கள் என்ற நிலைக்கு வந்துவிட்டன.

எட்டு வருடங்களுக்கு முன்னர் ராஜபக்சாக்கள் தங்களுக்கென்று தொடங்கிய சிறிலங்கா பொதுஜன பெரமுன குறுகிய காலத்தில் நாட்டின் மிகப்பெரிய அரசியல் கட்சியாக வளர்ந்தது மாத்திரமல்ல, ஆட்சியதிகாரத்தையும் கைப்பற்றியது. இரு வருடங்களுக்கு முன்னர் இலங்கை வரலாறு காணாத மக்கள் கிளர்ச்சியின் மூலமாக அதிகாரத்தில் இருந்து விரட்டப்பட்ட ராஜபக்சாக்கள் மீண்டும் தங்களது கட்சியை வலுப்படுத்தும் முயற்சிகளை தீவிரப் படுத்தியிருக்கிறார்கள். அதற்கு மேதினத்தையும் அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள்.


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி நீண்டகாலத்துக்கு பிறகு இந்த தடவை விமரிசையாக மேதினக் கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்திருந்தது. மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலத்துக்கு பிறகு ஐக்கிய தேசிய கட்சி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒருவர் தலைமையில் மேதினத்தைக் கொண்டாடியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

*1993* மேதினத்தன்று கொழும்பில் ஐக்கிய தேசிய கட்சியின் ஊர்வலத்துக்கு தலைமைதாங்கி ஆதரவாளர்களுடன் நடந்துவந்து கொண்டிருந்தபோது ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். அவருக்கு பிறகு ஐக்கிய தேசிய கட்சி தலைவர் எவரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறவில்லை. கால் நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக தன்னிடமிருந்து நழுவிக்கொண்டிருந்த ஜனாதிபதி பதவிக்கு தற்போதைய ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் விக்கிரமசிங்க எவ்வாறு வந்தார் என்பது மிகவும் அண்மைக் கால வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வு.

அவர் ஜனாதிபதியாக பதவியேற்று இரு வருடங்கள் நிறைவு பெறுவதற்கு இன்னமும் இரு மாதங்களே இருக்கின்ற போதிலும், மக்கள் மத்தியில் தனது கட்சியை மீண்டும் கட்டியெழுப்ப முடியாத நிலையே தொடருகிறது. கடந்த பொதுத் தேர்தலில் பாராளுமன்றத்தில் ஒரு ஆசனத்தைக்கூட கைப்பற்ற முடியாமல் வரலாற்று தோல்வியைச் சந்தித்த ஐக்கிய தேசிய கட்சி விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் மாத்திரமே புத்துயிர் பெறும் நம்பிக்கையை பெறக் கூடியதாக இருந்தது.









பல வருடங்களுக்கு பிறகு அந்த கட்சியின் மேதினக்கூட்டத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டுவந்ததை கடந்த புதன்கிழமை காணக்கூடியதாக இருந்தது. ஜே.வி.பி.யின் கூட்டங்களுக்கு பெருமளவில் மக்கள் அணிதிரண்டுவந்து கலந்து கொண்டாலும், அந்த ஆதரவு தேர்தல்களில் வாக்குகளாக மாறவதில்லை என்று பேசப்படுவது வழமையாக இருந்தது. தற்போது ஐக்கிய தேசிய கட்சியைப் பொறுத்தவரையிலும் கூட மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் திரள் வாக்குகளாக மாறுமா என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.

இந்த தடவை மேதினக் கூட்டத்துக்கு நாட்டின் பல பாகங்களிலும் இருந்து மக்களைக் கூட்டிவந்து பிரமாண்டமான காட்சியை காண்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இருந்தது. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவிப்பதற்கு முன்னதாக பரந்தளவிலான கூட்டணி ஒன்றை அமைக்கும் முயற்சிகளில் ஏற்கெனவே இறங்கியிருக்கும் விக்கிரமசிங்கவுக்கு தனது கட்சி நான்கு வருடங்களுக்கு முன்னர் இருந்த படுமோசமான பலவீன நிலையில் தற்போது இல்லை என்று காண்பிக்கவேண்டிய தேவை இருக்கிறது. அந்த நோக்கத்திற்கு மேதினத்தை பயன்படுத்துவதில் அவரும் கட்சியும் முழு அளவில் அக்கறை காட்டினார்கள்.

ஆனால், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது குறித்து விக்கிரமசிங்க கொழும்பு மேதினப் பேரணியில் சிலவேளை அறிவிக்கக்கூடும் என்று எதிர்பார்க் கப்பட்ட போதிலும் அவர் அதைப் பற்றி எதையும் பேசவில்லை. மாறாக பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் தற்போதைய பொருளாதார மறுசீரமைப்பு திட்டத்தை தொடருவதற்கு அரசாங்கத்துடன் பொது இணக்கப்பாடு ஒன்றை எட்டுவதற்கு முன்வருமாறு முக்கிய எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி உட்பட சகல அரசியல் கட்சிகளுக்கும் அவர் அழைப்பு விடுத்தார்.

புதிதாக வாக்குறுதிகளை வழங்குவதற்கு பதிலாக ஜனாதிபதி சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் சட்டமாக்குவதற்கு அரசாங்கத்துக்கு ஆதரவளிக்குமாறு கட்சிகளை கேட்டுக்கொண்டார். அவரைப் பொறுத்தவரை, தனது எதிர்கால அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான அம்சமாக தற்போதைய பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளை கையாளுவதிலேயே கவனம் செலுத்துகிறார் என்பது தெளிவானது.

வேறு சில கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள் ஐக்கிய தேசிய கட்சியின் மேதினப் பேரணியில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. மேதினத்தன்று சில அரசியல் அதிர்வுகள் ஏற்படும் என்று கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜேவர்தன முதல்நாள் கூறியிருந்தார் என்ற போதிலும், பொதுஜன பெரமுனவின் மொனராகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைத் தவிர வேறு எவரும் மேடையில் ஏறவில்லை.

அதேவேளை, சஜித் பிரேமதாச தனது கட்சியின் கொழும்பு பேரணியில் உரையாற்றியபோது நாட்டின் அரசியல் சவால்களை கையாளுவதற்கு தனது கட்சி கடைப்பிடிக்கப்போகும் அணுகுமுறைகளை விளக்கிக் கூறியதுடன் பல்வேறு உறுதிமொழிகளையும் வழங்கினார்.

தனது எதிர்கால அரசாங்கம் சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு சிங்கள மக்களின் ஆதரவுடன் நிலைபேறான தீர்வைக் காண்பதற்கு பாடுபடும் என்று கூறிய பிரேமதாச அரசியலமைப்புக்கான 13 திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் உறுதிகொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

சிறுபான்மைச் சமூகங்களுக்கு நேசக்கரம் நீட்டியதாக அமைந்த எதிர்க்கட்சி தலைவரின் உரை ஜனாதிபதி தேர்தலில் அந்த சமூகங்களின் ஆதரவைப் பெறுவதில் அவர் கொண்டிருக்கும் கடுமையான அக்கறையை வெளிக்காட்டியது.

மற்றைய கட்சிகள் சகலவற்றினதும் மேதினப் பேரணிகளில் கலந்துகொண்ட மக்களையும் விட மிகவும் கூடுதலான மக்கள் அணிதிரண்டிருந்த தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு பேரணியில் உரையாற்றிய அதன் தலைவர் அநுரா குமார திசாநாயக்க ஜனாதிபதி தேர்தலில் தனது வெற்றியில் அவருக்கு இருக்கும் உறுதியான நம்பிக்கையின் ஒரு வெளிப்பாடாக அடுத்த மேதினத்தை இலங்கை தங்களது அரசாங்கத்தின் கீழேயே கொண்டாடும் என்று கூறினார்.

வழமைபோன்று கடந்த கால அரசாங்கங்கள் மீது கடுமையான தாக்குதலைத் தொடுத்த திசாநாயக்க திட்டவட்டமான கொள்கைகளை விளக்குவதை விடுத்து பொருளாதார மீட்சிக்கான தேசிய மக்கள் சக்தியின் செயற்திட்டத்தில் மக்களையும் பல்வேறு சக்திகளையும் இணைப்பது குறித்து பொதுப்படையாகப் பேசினார்.

இது இவ்வாறிருக்க, தங்களுக்கு இருப்பதாக தாங்கள் நம்புகின்ற மக்கள் ஆதரவை நிரூபிக்க மேதினப் பேரணியை பயன்படுத்துவதில் நாட்டம் காட்டிய ராஜபக்சாக்கள் அதில் எதிர்பார்த்த வெற்றியைக் கண்டதாகக் கூறமுடியாது.

கொழும்பு கெம்பல் பூங்காவில் நடைபெற்ற மேதினப் பேரணியில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வழமை போன்று தங்களது கட்சியின் ஆசீர்வாதத்துடன் போட்டியிடும் வேட்பாளரே ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவார் என்று பெருமை பேசினார். பொருளாதார நெருக்கடியைக் கையாளுவதற்கு அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு கோட்டாபய ராஜபக்ச கேட்டபோது அந்த சவாலை ஏற்பதற்கு பிரேமதாசவும் அநுரா குமாரவும் அஞ்சியதாகக் கூறியதன் மூலம் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு முறைமுகமான ஒரு பாராட்டைத் தெரிவித்தார். ஆனால், ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவுக்கு தனது கட்சி ஆதரவளிக்கும் என்று வெளிப்படையாக அவர் கூறவில்லை.

இதனிடையே, சிறிலங்கா சுதந்திர கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அறிவிக்கப்பட்ட சில மணி நேரத்தில் கொழும்புக்கு வெளியே கம்பஹாவில் மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச சுதந்திர கட்சியின் அரசாங்கம்

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காது குத்தி கடுக்கன் பூட்டும் அரசியல் தமிழரைச் சுற்றிவளைக்க வருகிறது!

**பனங்காட்டான்**

ஜனாதிபதி தேர்தல் இந்த வருடம் நிச்சயம் நடைபெறுமென்ற நம்பிக்கை இப்போது பலருக்கும் ஏற்பட்டுள்ளது. அதனால்தான் இந்த மாத மே தின விழா உரைகள் தேர்தல் விஞ்ஞாபனங்கள் போன்று அமைந்திருந்தன.

இலங்கையின் மூத்த சிங்களக் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும், சிறீலங்கா சுதந்திர கட்சியும் மற்றைய கட்சிகளின் கூட்டில் அரசியல் பயணம் செய்ய வேண்டிய அவல நிலையையும் இப்போது பார்க்க முடிகிறது.

இப்போதுள்ள நிலைமையைப் பார்க்கும்போது ஆகக் குறைந்தது பத்துப் பேர் வரை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடக்கூடிய சாத்தியம் உள்ளது. ஆனால், போட்டி மூவர்களுக்கிடையிலேயே இருக்கும். ரணில், அனுர, சஜித் ஆகியோர் விட்டுக் கொடுத்து இணைந்து போட்டியிட முடியாத நிலைக்குச் சென்றுள்ளனர்.

ரணிலின் மே தின உரை நேரடியாக எதிர்தரப்பு போட்டியாளர்கள் இருவரையும் தம்முடன் வந்து இணையுமாறு அழைப்பு விடுத்தது. பொருளாதார வீழ்ச்சியை தாரக மந்திரமாக்கி இயங்குபவர் இவர். அதற்கான கடனைப் பெறுவதற்கு அனுரவையும் சஜித்தையும் தம்முடன் இணையுமாறு கேட்கிறார்.

இந்த அழைப்புக்கு எவரும் செவிசாய்க்கப் போவதில்லையென்பது அவருக்கு நன்றாகத் தெரியும். ஆனால், நாட்டின் சுபீட்சத்துக்கு கட்சி அரசியலுக்கு அப்பால் எவருடனும் தாம் இணையத் தயார் என்பதை பொதுவெளியில் படம் காட்டுவதே இவரது அழைப்பின் நோக்கம்.


இவரது பெரியதந்தை முறையான ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்தபோது ஒருதடவை எந்தப் பேயுடனும் சேருவதற்குத் தாம் தயாராக இருப்பதாகக் கூறி பலருக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்தவர். அவரது தடத்தில் நடைபயிலும் ரணில், பொதுமக்களின் பார்வைக்காக அனுரவையும் சஜித்தையும் அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் இது நடைமுறையில் சாத்தியப்படாது.

இதனை ஒருபக்கம் விட்டு, சஜித் பிரேமதாசவின் மே தின உரையின் பக்கம் பார்வையைத் திருப்பினால் ஆச்சரியம் தரும் விடயம் 13ம் திருத்தம் தொடர்பாக அவர் தெரிவித்திருக்கும் கருத்து. தாம் பதவிக்கு வந்ததும் 13ம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று துணிச்சலுடன் கூறியுள்ளார்.

13வது திருத்தம் என்பது 1987ல் ராஜீவும் ஜே.ஆரும் செய்து கொண்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஒரு குழந்தை. காணி அதிகாரம், காவற்துறை அதிகாரம் ஆகிய இரண்டுமே இக்குழந்தையின் கண்கள். இந்த ஒப்பந்தத்தில் காலஞ்சென்ற இரு நாட்டுத் தலைவர்களும் கைச்சாத்திட்டு 37 ஆண்டுகளாயினும், இதன் எந்த அம்சமும் இதுவரை அமலாக்கப்படவில்லை.


இறுதியாக, ரணில் விக்கிரமசிங்க அவர்களால் வடக்கு தமிழரின் பிரச்னையைத் தீர்க்கப்போவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் காவற்துறை அதிகாரமில்லாத மாகாண சபை நிர்வாகத்தை மட்டுமே தர முடியுமென குறிப்பிட்டிருந்தார். இவ்வளவு காலம் காத்திருக்க வைத்து 13வது திருத்தத்துக்கு அவர் சைகை காட்டினாராயினும் அது தமிழர் தரப்பின் வரவேற்பைப் பெறவில்லை. மாறாக, ஆத்திரத்தையே உண்டுபண்ணியது.


ஆனால், கொழும்பிலுள்ள வெளிநாட்டு ராஜதந்திரி ஒருவருடைய பார்வை இவ்விடயத்தில் மாறுபட்டது. முதலில் கிடைக்கப் பெறுவதை பெற்றுக் கொள்வது நல்லது என்று தமிழர் தரப்பினரிடம் அவர் கருத்துத் தெரிவித்திருந்தார். இவ்விடயம் தொடர்பாக பல நாடுகளின் ராஜதந்திரிகளும் தங்களின் கவனத்தைத் திருப்பியுள்ளனர்.



தமிழர் தாயகத்திலுள்ள பல ஏக்கர் காணிகள் மத வழிபாட்டு நிலங்கள் பறிபோகின்றது. அதனைத் தடுப்பதற்காவது மாகாண சபைகள் காணி அதிகாரங்களைப் பெறுவது இப்போதைக்கு தேவையானது என்று குறிப்பிட்ட அந்த ராஜதந்திரி தம்மைச் சந்தித்த தமிழ் பிரமுகர்களிடம் கூறியிருந்தார்.







> 1987ல் ராஜீவும் ஜே.ஆரும் கைச்சாத்திட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்தவர் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. இவருக்கு இணையாக அந்த ஒப்பந்தத்தை எதிர்த்து கொலைக்களத்தில் தாண்டவமாடியவர்கள் அனுரகுமார கட்சியினர். அந்த ஒப்பந்தத்தின் குழந்தையான 13ம் திருத்தத்தை முழுமையாக தாம் நிறைவேற்றப் போவதாக அறிவித்துள்ளார் பிரேமதாசவின் மகனான சஜித் பிரேமதாச. இவர் செய்வாரா? நாம் நம்பலாமா?

மறுபுறத்தில் தமிழர் தரப்பு பல நெருக்கடிகளுக்கு உட்பட்டிருக்கும் இவ்வேளையில் சிதைந்து போயிருக்கும் அதன் கூட்டை பலவீனமடையச் செய்யும் அரும்பணிகள் திரைமறைவில் இடம்பெறுகின்றன. கொழும்பு இறக்குமதிகள் இக்கைங்கரியங்களைச் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. எக்காரணம் கொண்டும் பொதுவேட்பாளர் ஒருவர் தமிழர் தரப்பிலிருந்து போட்டியிடக்கூடாதென்பதில் கொழும்பு இறக்குமதிகளில் ஒருவர் தீவிரமாக உள்ளார். இதற்கு நேர்மாறான நிலையில் தமிழரசு எம்.பி. சிவஞானம் சிறீதரன் செயற்படுகின்றார்.

சிங்களத் தரப்பில் போட்டியிடும் முக்கியமான மூவர் பற்றி அவர் தெரிவித்துள்ள கருத்து முக்கியமானது. அது பின்வருமாறு: விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்த கருணாவை பிரித்து பல துரோகங்களைச் செய்தவர் ரணில் விக்கிரமசிங்க. அரசியலில் ஆளுமையற்றவராகக் காணப்படுகிறார் சஜித் பிரேமதாச. அனுரகுமார தலைமையிலான ஆட்சி இராணுவத்துக்கு பலம் சேர்த்து வடக்கையும் கிழக்கையும் பிரித்து யுத்த வெற்றியைக் கொண்டாடியது என்கிறார் சிறீதரன்.

இதனால் பிரதான சிங்கள வேட்பாளர்கள் மூவருக்கும் தமிழர்கள் வாக்களிக்கக்கூடாது என்பது இவரது நிலைப்பாடாக அமைந்துள்ளது. இது தொடர்பாக வெவ்வேறு தரப்பினர் பல்வேறு சந்திப்புகளையும் ஆலோசனைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் தமிழ் பொது வேட்பாளருக்கான ஆதரவுத்தளம் படிப்படியாக அதிகரித்து வருவதைக் காண முடிகிறது.

வெறுமனே தமிழர் வாக்குகளால் பொதுவேட்பாளர் தேர்தலில் வெற்றி பெற முடியாதென்பது விரல் சூப்பும் குழந்தைக்கும் தெரியும். ஆனால், தமிழர் வாக்குகளை ஒன்று திரட்டி பொதுவேட்பாளருக்கு அளிப்பதனூடாக அந்த திரட்சி என்பது தமிழர் தரப்பு எதனை வேண்டி இயங்குகிறது என்பதை சர்வதேசத்துக்கு புலப்படுத்த முடியும். தமிழின ஒற்றுமையை புலப்படுத்த ஒரு தோல்வி பல வெற்றிகளுக்கு நிகராக அமையும்.

இதனை நன்றாக புரிந்து கொண்ட சிங்கள வேட்பாளர்கள் தமிழர் தரப்பை எத்தி வாக்குகளைப் பெறுவதற்கு தம்மைத் தயார் பண்ணுகின்றன. இனப்பிரச்னைக்கான நேர்மையான தீர்வுத்திட்டம் சிங்கள வேட்பாளர்களிடம் அல்லது அவர்களின் கட்சிகளிடம் அறவே இல்லை. ஆனால், தேர்தல்களுக்கேயுரிய ஏமாற்று சுலோகங்கள் இவர்களிடம் நிரம்ப உண்டு.

13ம் திருத்தத்தை முழுமையாக அமல்படுத்தப் போவதாக சஜித் பிரேமதாச தமது மே தின உரையில் குறிப்பிட்டுள்ளார். இவரது தந்தையான ஆர்.பிரேமதாச 1987ல் ஜே.ஆரின் ஆட்சியில் பிரதமராக இருந்தபோதே இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதனை முழுமையாக எதிர்த்த பிரதமர் பிரேமதாச இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியை சந்திப்பதையும் முழுமையாகப் புறக்கணித்தார்.

ராஜீவ் காந்தியை துப்பாக்கி முனையால் தாக்க எத்தனித்த கடற்படைச் சிப்பாயை அடுத்த பொதுத்தேர்தலில் வேட்பாளராக்கி - தமது இலங்கை - இந்திய ஒப்பந்த எதிர்ப்பு மனநிலையை அன்று வெளிப்படுத்தியவர் சஜித்தின் தந்தை. அவ்வேளை 13ம் திருத்தத்தை எதிர்த்து சன்னதம் கொண்டு ஆடி இலங்கையை கொலைக்களமாக்கியது அனுர குமாரவின் கட்சி. இவ்விருவரும் நம்பிக்கையற்றவர்கள். இந்த நிலையில் ரணில் இன்னமும் தாம் போட்டியிடப் போவதாக பகிரங்கமாகக் கூறவில்லை. அனேகமாக யூன் மாதத்தில் உலக வங்கியின் கடன் திட்டம் பூர்த்தியான பின்னர் அந்த வெற்றிக் களிப்பு அறிவித்தலுடன் தமது தேர்தல் போட்டியையும் ரணில் அறிவிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், ரணில் போட்டியிட மறுப்பது போலவும், அவரை போட்டியிட அவரது ஆதரவாளர்கள் வலியுறுத்துவது போலவும் ஒரு குறுநாடகம் காட்டப்படுகிறது. இதுவும் ஒருவகை உத்தியே.

தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகியவற்றின் உறுப்பினராகவிருந்த முக்கிய பிரமுகர் ஒருவர் பொதுத்தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்னர் தாம் தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென ஊடகங்களில் வெளிவரச் செய்துவிடுவார். சில நாட்களுக்குள் அவரது தொகுதி மக்கள் பெருந்தொகையானோர் அவரது வீட்டுக்குச் சென்று தேர்தலில் போட்டியிட வேண்டுமென அன்புத்தொல்லை கொடுப்பர். அவர்களின் கோரிக்கைக்காக தாம் போட்டியிடுவதாகக் கூறும் அந்தப் பிரமுகர் பொங்கல் திருநாளன்று மாட்டு வண்டி ஊர்வலத்தில் முதலாவது வண்டிலில் வெறும் மேலுடன் அமர்ந்து காட்சிச் சவாரி செய்து வாக்காளர் மனங்களை வென்று விடுவார்.

இந்த ஒத்திகையையே ரணிலும் இப்போது பின்பற்றுகிறார்போல் தெரிகிறது. பொதுஜன பெரமுனவும் தமது ஐக்கிய தேசிய கட்சியினரும் ஒன்றாக வந்து தம்மைப் போட்டியிடுமாறு கேட்ட பின்னரே, தாம் போட்டியிடப் போவதாக அறிவிக்க இருப்பதே ரணில் போட்டிருக்கும் திட்டம். என்னதான் திட்டமிட்டுச் செய்தாலும் தமிழர் மனங்களை வென்று அவர்கள் வாக்குகளைப் பெறுவது சுலபமானதல்ல என்பது அவருக்குத் தெரியாததல்ல.

இதற்காக தமது ஆட்சியில் காலநிலை சிரேஷ்ட ஆலோசகராக தம்மால் நியமிக்கப்பட்ட நோர்வே பிரமுகர் எரிக் சொல்கெய்மை இதற்குப் பொருத்தமான ஆளாக தெரிவு செய்துள்ளார். ஜனாதிபதியின் அரசியல் காலநிலையை அவதானிக்கும் பிரதான வாக்குச் சேகரிப்பாளராக எரிக் சொல்செய்மை தமிழர் தாயகத்துக்கு அனுப்பியுள்ளார் ரணில். பணம் வழங்கும் நிதி நிறுவனங்களை சாதுரியமாக கையாண்டு வருகிறார்.

மறுதரப்பில், நல்லாட்சிக் கால ஏமாற்றம் போதாதென்று தமிழருக்கு காது குத்தி கடுக்கன் பூட்டி தலைப்பாகை வைத்து ஏமாற்ற புதிய கூட்டம் ஒன்று களமிறக்கப்படப் போகிறது. இதில் எரிக் சொல்கெய்ம் பிரதான செயற்பாட்டாளராக இடம்பெறப் போகிறார்.

இனியென்ன? ரணில் பதவி இழந்து வீடேகும்வரை எரிக் சொல்கெய்ம் தமிழர் வீட்டு செல்லப்பிள்ளையாக வலம் வருவார். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் இராவணேசன்

மௌனகுரு

**பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நூறாவது பிறந்த நாள் எதிர்வரும் 8ஆம் திகதி. அவர் நினைவாக, பேராசிரியர் மௌனகுரு தனது முகநூலில் எழுதியுள்ள குறிப்பை இங்கு வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.**




மிக நீண்ட நாட்களுக்குப் பின் பழக்கமான ஒரு குரல் தொலை பேசியில் கேட்டது "மாமா நான் நங்கை பேசுகிறேன்" நங்கையின் உண்மையான பெயர் மகிழ் நங்கை.

பேராசிரியர் வித்தியானந்தனின் மூத்த மகள். சின்ன வயதிலேயே ஆளுமை நிறைந்த ஒரு சிறுமி 1961 காலப்பகுதியில் இன்றைக்கு 60 வருடங்களுக்கு முன்னர், பேராசிரியர் வித்தியானந்தன் ஈழத்துத் தமிழருக்கான ஒரு நாடக வடிவம் தேடி அலைந்து திரிந்த காலம் அது தன் தேடலின் விளைவாக அவர் நான்கு கூத்துகளை இலங்கையில் புகழ்மிக்க பல்கலைக்கழகமான பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அவர் மேடையிட்டார் அவையாவன, கர்ணன் போர், நொண்டி நாடகம், ராவணேசன், வாலி வதை அந்த நான்கின் உருவாக்கங்களில் ஈடுபடவும் அவரோடு நெருக்கமாகப் பயணம் செய்யவும் ஆன ஒரு வாய்ப்பை எனக்கு அவர் அளித்தார் அது எனக்கு ஒரு பெரு அனுபவம் ஆயிற்று நாடகம் எனது துறையும் ஆயிற்று பல்கலைக்கழக மாணவர்கள் புகுந்தனர் முதன் முதலில் பெண்கள் கூத்து ஆடினர் இவை இரண்டும் அவர் செய்த பெரும் காரியங்கள் அந்த நாடக ஒத்திகைகளுக்குத் தவறாது வருபவர் இருவர் ஒருவர் அவரின் மூத்த மகனான அறிவுடைய நம்பி மற்றவர் அவருக்கு அடுத்த அவரது மூத்த மகளான மகிழ் நங்கை நம்பிக்கு 13 வயது இருக்கும் நங்கைக்கு 10 வயது இருக்கும் ராவணேசன் நாடகத்தால் அவர்கள் வெகுவாக ஈர்க்கப்பட்டார்கள் மாமா மாமா என்று ஒட்டிக்கொள்வார்கள் ஒத்திகை முடிய ராவணனின் கதாயுதத்தைத் தூக்கியபடி ராவணன் போல நடந்து செல்வான் நம்பி அந்தக் காட்சி இப்போது அப்படியே ஞாபகம் வருகிறது வீட்டிலே நங்கையும் நம்பியும் ராவண ராம இறுதி யுத்தத்தை ஆடி நிகழ்த்துவார்கள் நங்கைதான் ராவணன் அவளுக்கு இராவணேசன் கூத்துப் பாடல்கள் அவ்வளவும் வாய்ப்பாடம் தினமும் பயிற்சிக்கு தந்தையோடு வந்து விடுவார்கள் குழந்தைகள் மனதில் ஆடல் பாடல்கள் எளிதாக பதிந்து விடும் அல்லவா? மாமா மாமா என்று அன்பைப் பொழிவார்கள் ஒத்திகைகளுக்கு ஒழுங்காக வருவார்கள் மேடை ஏற்றங்களில் முன்னால் இருந்து. ரசிப்பார்கள் அது ஒரு காலக்கதை பேராசிரியர் வித்தியானந்தரின் மனைவி கமலா அக்கா தான் ஆடை வடிவமைப்பாளர் தாய் போல அவர் எங்களுக்கு விளங்கினார் சேரின் குடும்பமே கூத்துக்குள் வாழ்ந்த காலம் அக்காலம் அந்த நங்கைதான் போன் பண்ணி இருந்தாள் அவளுக்கு இப்போது 68 வயதுக்கு மேல் ஆகிவிட்டது.

முதுமையின் வாயில் படியில் நிற்கிறாள் குழந்தை குட்டிகளோடு ஆஸ்திரேலியாவில் இருக்கிறாள். அவள்தான் அந்த வேண்டுகோளை விடுத்தாள் "அப்பாவின் நூற்றாண்டு விழா விரைவில் வருகிறது எங்களுக்கு ராவணேசன் பார்க்க ஆசை அது இப்போது பல்வேறு வகையாக வளர்ந்து விட்டது என்று கேள்விப்படுகிறேன. ஆனால். அப்பா தயாரித்த அதே பாணியில் அதனை நீங்கள் எங்களுக்குத் தயாரித்து தர வேண்டும் மாமா" மிக வேண்டியவரிடம் இருந்து வந்த மிக முக்கியமான வேண்டுகோள் இது அது அவளது வேண்டுகோள் ஆக மட்டுமல்ல எனது மனதில் கிடந்த நீண்ட நாளைய ஆசையாகவும் இருந்தது அக்காலத்தில் அதனை வீடியோ செய்து வைக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை வீடியோவே வராத காலம் அது அந்த உருவாக்கலில் பலர் பங்கு கொண்டனர். ராவணனாக பாத்திரம் தாங்கியதுடன் முற்று முழுதாக அதன் ஒவ்வொரு அசைவிலும் பங்கு கொண்டமையினால் என் மனதில் அந்த உருவாக்கல் ஆழமாகப் பதிந்து போய் இருந்தது.

அதுவே என்னைப் பின்னால் வழி நடத்தியது நான் இறப்பதற்கு முன்னர் அவரது பாணியிலேயே அதனை உருவாக்கி நாடக அரங்கியல் மாணவர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும் என எண்ணியும் இருந்தேன் சில முயற்சிகளும் பண்ணி இருந்தேன் அந்தச்சிந்தனைக்கு இப்போது ஒரு வடிவம் கிடைத்தது மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டேன் இந்த வேண்டுகோள் எனக்கு விடுக்கப்பட்டு ஆறு மாதங்கள் ஆகிவிட்டன.

அதனை உருவாக்குதலில் பல சவால்களை நான் எதிர்கொள்ள வேண்டி நேரிட்டது.

**1. ஒன்று எனது இப்போதைய உடல் நிலையும் வயதும்**

**2. இரண்டு அதில் பங்கு கொள்ள 20 மாணவர்கள் தேவை**

**3 மூன்று அவர்களை எடுத்து பயிற்சி அளிக்க வேண்டிய காலம்**

**4. நான்கு அதற்கான தயாரிப்புச் செலவுகள்**

**5. ஐந்து நான் இப்போது கொழும்பிலே வதிவதனால் காரிய சாத்திய மாக்குவது பற்றிய சிரமம்**

இது முடியக் கூடிய காரியமா என்று யோசித்தேன். என்றாலும் எனக்கு அது காலமிட்ட கட்டுளையாகத் தோன்றியது நான் செய்ய வேண்டிய கடமையாகவும் இருந்தது அந்தத் தயாரிப்பை அருகில் இருந்து பார்த்த இருவர்தான் இப்போது உயிரோடு இருக்கிறோம் அதில் முழுமையாக ஈடுபட்ட நான் அதனால் இதனை என்னால் தொடரவும் முடிந்தது.

எனக்கு பக்க துணையாக நிற்கின்ற பேராசிரியர் சண்முகதாஸ் விழி அவர் பின் பாடகராக வந்தார். அதில் பங்கு கொண்ட அனைவரும் இப்போது இறந்து விட்டார்கள் பழைய ஞாபகங்களையும் படங்களையும் வைத்துக் கொண்டு அதே போல உருவாக்க எடுத்த முயற்சிதான் இந்த ராவணேசன் **Recollecting the old good memories** இந்த முயற்சியை ஆரம்பத்தில் நான் கிழக்கு பல் கலைக்கழகத்தில் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் நான்கு மாதங்களுக்கு முன் ஆரம்பித்தேன்.

பணிப்பாளர் பேராசிரியர் பாரதி மிக உதவியாக இருந்தார் அதை ஒரு கல்வித் திட்டமாக வடிவமைத்து கல்விச்சபையின் அனுமதி பெற்றுத்தந்து எல்லாத் துறைகளையும் அதோடு இணைத்தும் தந்தார் பயிற்சிகள் கோலாகலமாக ஆரம்பமாகின பெரும்நம்பிக்கையோடு பயிற்சிகளை ஆரம்பித்தேன் ஆனால் பல்கலைக் கழகத்திற்குரிய

பரீட்சைகள் [illegible] கள் வேலை நிறுத்தங்கள் அங்குள்ள அதிகார கட்ட மைப்புகள் அதற்கே உரிய சில முக்கிய குணம்சங்கள் காரணமாக அந்த செயல் அங்கு சாத்தியப்பட முடியவில்லை ஆரம்பத்தில் நீண்ட பிரயாணக் கஷ்டத்தையும் உடல் நிலையையும் பொருட்படுத்தாது. மாதம் இருமுறை சென்று பயிற்சி அளித்து வந்தேன். ஆனால் அது போதாது போல எனக்கு பட்டது இடைக்கிடை வந்த லீவுகள் பங்கு கொண்ட மாணவர்கள் எதிர்கொண்டு மேலதிக படிப்பு வேலைகள் காரணமாக அங்கு அதனை காத்திரமாக த் தொடர முடியவில்லை இந்த நிலையில் எனக்கு கை கொடுத்தார்கள் டவர்ஹால் நாடக நிறுவகத்தினர் யாழ்ப்பாணத்தில் அவர்கள் அந்தப் பாட நெறியை நடத் திக் கொண்டிரு ந்தார்கள் அதன் பெரும் பணிப்பாளர் அபயவர்த்தன என்னை யாழ்ப்பாணம் சென்று அவர்களுக்கு வகுப்பு எடுக்குமாறு சென்ற வருடம் கேட்டுக் கொண்டார். அதன் தமிழ் பொறுப்பாளர் ஜெயப்ரகாசும் உதவினார். இரண்டு முறை சென்று இருப்பேன். திறன் மிக்க மாணவர்களை அங்கு கண்டேன். அண்மையில் அதனை எனது உதவியுடன் அயூரன் பழக்கி மேடை இட்டும் இருந்தார்.

அவர் மேடையிட்ட பாணி வேறு அவர்களை வைத்துக் கொண்டு பழைய பாணியை கொண்டு வந்து விடலாம் என யோசித்தேன் இப்போது அதற்கான பயிற்சிகள் ஆரம்பமாகியுள்ளன யாழ்ப்பாணத்தில் பத்து நாட்கள் தங்கி காலை முதல் இரவு வரை ஓரிடத்தில் அவர்களை வைத்துப் பயிற்சி அளிப்பது எனது திட்டம் நேற்று இது ஆரம்பமாகியது.

இம்மாதம் 11ஆம் தேதி இந்த நாடகம் யாழ்ப் பாணத்தில் மேடையேறும் வெள்ளி பின்னேரம் யாழ்ப்பாணம் வந்தேன் வந்து இறங்கியதும் முதன் முதலில் என்னை வரவேற்றது அனல் பறக்கும் வெயிலும் மோசமான வியர்வையும் தான் சூடு என்னைச் சூழ நிறைந்திருந்தது போல தெரிந்தது அக்கினிக் காட்டுக்குள் நின்றது போல இருக்கிறது முதலில் வித்தியானந்தனின் தெல்லிப்பளையிலிருந்த வீடு சென்று அதனைத் தரிசித்தேன் அத்தோடு அவரது நல்ல நண்பரான காங்கேசன்துறை நடிகமணி வைரமுத்துவின் சிலையைச் சென்று பார்வையிட்டோம் இருவரின் ஆசீர்வாதங்களுடன் பணியை வெள்ளியன்று மேற்கொண்டேன் நங்கையோடு உரையாடி "அம்மா உன் வேண்டுகோள் நிறைவேற்றப்பட போகிறது" என்று கூறினேன். ●

38 ஆவது ஆண்டு நினைவுகள்
தமிழ் தேசிய ஒற்றுமை வாரம் ( சித்திரை 29 - வைகாசி 06 )




தலைவர் சிறி சபாரத்தினம்

தூய சிந்தனைகளையும்
நல்ல எண்ணங்களையும்
விடுதலைக்காக விட்டுச்சென்ற
வரலாற்று நாயகன்
இலட்சியக் கனவுகளுடன்
இறுதிவரை போராடி
ஈழ விடுதலையை உரமூட்டி நேசித்த
ஒப்பற்ற எம் தலைவன் !!

1986 சித்திரைத் திங்கள் 29 தொடக்கம் வைகாசித் திங்கள் 06 வரை விடுதலைக் களத்தில் காவியமான எமது தலைவர் சிறி சபாரத்தினம் அவர்களுக்கும் ஏனைய ரெலோ போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும் மீண்டும் மீண்டும் எமது வீர வணக்கங்களை செலுத்துகின்றோம்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO)
இணையம் : www.telo.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. அருந்தவபாலன்

# கூரையேறி கோழி பிடிக்க முடியாதவர்கள் வானமேறி தமிழர்களுக்கு வைகுண்டம் காட்டுவார்களா?

இலங்கையின் அரசியலமைப்புக்கமைய ஜனாதிபதித் தேர்தல் இவ்வாண்டின் பிற்பகுதியில் நடைபெறுவது பெருமளவுக்கு உறுதியாகவிட்டது மட்டுமன்றி அத்தேர்தலில் போட்டியிடவுள்ள பிரதான வேட்பாளர்கள் யார் என்பதுவும் பெருமளவுக்கு உறுதியாகிவிட்டது. இதில் தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பி) சார்பாக அனுரகுமார திசநாயகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் சஜித் பிரேமதாஸவும் ஐக்கிய தேசிய கட்சி, பொதுஜன பெரமுன உட்பட வேறுசில சிறிய கட்சிகள் மற்றும் அரசியல் தலைவர்களின் ஆதரவுடன் கட்சி சாராத பொது வேட்பாளராக ரணில் விக்ரமசிங்கவும் பிரதான போட்டியாளர்களாக இருப்பார்கள் என எதிர்வு கூறப்படுகிறது. தற்போது இப்போட்டியில் ரணில் பின்தங்கியவராக இருப்பினும் எதிர்காலத்தில் அதில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகம் உள்ளன. இவர்களில் யார் அதிக வாக்குகளைப் பெறுவார்கள் என்பதை தேர்தல் நெருங்கும் வேளையில்தான் சரியாக எதிர்வு கூறமுடியுமெனினும் எந்தவொரு வேட்பாளரும் அளிக்கப்படும் மொத்த வாக்குகளில் முதல் சுற்று எண்ணிக்கையில் ஐம்பது சதவீதத்துக்கு மேல் பெறுவதற்கான சாத்தியம் காணப்படவில்லை. காரணம் வழமைக்கு மாறாக இம்முறை மும்முனைப் போட்டி நிலவுவதுடன் அதில் அனுரகுமார திசநாயக ஏனைய இரு பிரதான வேட்பாளர்களுக்கும் கடும் சவாலாக இருந்து வருவதுமாகும். இதன் காரணமாக வழமைக்கு மாறாக பிரதான போட்டியாளர் அனைவரதும் பார்வை தமிழ், முஸ்லிம் வாக்காளர் பக்கம் அதிகளவில் சாயத் தொடங்கியுள்ளது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தவிர ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் தற்போது சஜித் தரப்பில் இருந்து வந்தாலும் வருகின்ற தேர்தலிலும் அவ்வாறே தொடருவார்கள் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. அது பெருமளவுக்கு ரணிலின் எதிர்கால வெற்றி வாய்ப்புடன் தொடர்புபட்ட ஒன்றாக உள்ளது. இந்த மும்முனைப் போட்டியில் ரணில் முந்துவதற்கான அரசியல் களநிலை ஒன்று உருவாகுமானால் அவருடன் சங்கமிப்பதற்கு சிங்களத் தலைவர்கள் மட்டுமன்றி பல தமிழ், முஸ்லிம் தலைவர்களும் காத்திருக்கிறார்கள் என்பதே உண்மை. இதன்காரணமாகத் தமிழ், முஸ்லிம் மக்களைத் தக்க வைப்பதற்கும் தம்வசப்படுத்துவதற்குமான உத்திகளை இப்போட்டியாளர்கள் கைக்கொள்ளத் தொடங்கிவிட்டனர். அதிலும் குறிப்பாக குறித்த ஒருவருக்கே திரட்சியாக வாக்களிக்கும் தமிழ் மக்களின் வாக்குகளை கவர்வதில் அவர்கள் குறியாக உள்ளனர். இதில் ஆச்சரியமென்னவெனில் இதுவரை காலமும் தமிழர்களை வேண்டா வெறுப்பாகப் பார்த்துவந்த ஜே.வி.பியினர்க்குக்கூட இன்று தமிழ் மக்கள்மீது திடீர்ப் பாசம் பிறந்துள்ளமைதான்.

தேர்தலில் தாம் வெற்றி பெறுவதற்காகத் தமிழர்களின் வாக்குகளைப் பெறத் துடிக்கும் இவ்வேட்பாளர்கள் எவரும் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் பிரச்சினகள் பற்றியோ அனுபவிக்கும் சமகாலப் பிரச்சினைகள் பற்றியோ கதைப்பதற்குத் தயாரில்லை. தான் ஜனாதிபதியானால் நீண்ட காலமாகத் தமிழ் மக்கள் கோரிநிற்கும் அரசியல் தீர்வு தொடர்பாக அல்லது நில ஆக்கிரமிப்பு, மத, பண்பாட்டு அம்சங்களின் ஆக்கிரமிப்புகள் தொடர்பாக அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டார் தொடர்பாகத் தனது தீர்வுத் திட்டங்கள் என்ன என்பது பற்றி எந்தவொரு வேட்பாளரும் உருப்படியான தீர்வுகளை வெளிப்படையாக முன்வைக்கத் தயாராக இல்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகத் தாமாக எதுவும் சொல்லாமல் இருப்பது மட்டுமன்றி அது தொடர்பாக ஊடகர்களின் கேள்விகளுக்கும் 'கழுவிற தண்ணியில் நழுவுற மீனாக' பதிலளித்து மழுப்புவதையும் அவதானிக்கலாம். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டால் தீவிர சிங்களவர்களதும் பௌத்த சங்கத்தினரும் ஆதரவு எங்கே தமக்கு கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சத்தில் பேச்சளவில்கூட அதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு இல்லாதவர்களாகவே இவர்கள் இருக்கிறார்கள். சரி, அவர்களின் ஆதரவுக்காகவே இவர்கள் வெளிப்படையாக எதனையும் சொல்லத் தயங்குகிறார்கள் ஆனால் பதவிக்கு வந்ததும் தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவார்கள் என்று நம்புவதற்கும் இப்போட்டியாளர்களின் தமிழ்மக்கள் தொடர்பான கடந்த செயற்பாடுகள் இடம்தரவில்லை. தேர்தல் களத்தில் நிற்கப்போகும் இம்மூன்று வேட்பாளர்களும் நோகாமல் தமிழர்களின் வாக்கு நொங்கை குடிக்கப் பார்கிறார்கள் என்பதே கசப்பான உண்மை.

> **போட்டியாளர்கள் அனைவருமே தமிழர்கள் விடயத்தில் அடிப்படையில் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே. தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்க மனமில்லாதவர்கள். அக்கோரிக்கைகளைச் சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துக்கூறி வாக்குக் கேட்கத் திராணியற்றவர்கள்.**

அண்மைக்காலத்தில் சிங்கள மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கைப் பெற்று வரும் தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) யினதும் அதன் தலைவர் அனுரகுமாரவினதும் தமிழ் மக்களின் அரசியல் பிரச்னை தொடர்பான கொள்கை மற்றும் வெளிப்பாடுகளை நோக்கினால் அவர்களின் அடிப்படைக் கொள்கையில் எந்த மாற்றமும் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. தங்களை இடதுசாரிகளாகவும் முற்போக்குவாதிகளாகவும் காட்டிக் கொள்ளும் ஜே.வி.பியினர் நாட்டில் எரிந்துகொண்டிருக்கும் முதன்மைத் தேசியப் பிரச்சினையான தமிழர் பிரச்னைக்கு எத்தகைய தீர்வையும் இதுவரை வெளிப்படுத்தவில்லை. அவர்கள் கூறுவது போல் முற்போக்கான இடதுசாரிச் சிந்தனையாளர்களெனில் தேசிய இனப்பிரச்சினைக்கு மற்றக்கட்சிகளைவிட உயர்வான ஒரு தீர்வாக அதிகளவு தன்னாட்சி அதிகாரத்தைக் கொண்ட ஒரு அரசியல் தீர்வை அவர்கள் முன்வைத்திருக்க வேண்டும். ஆனால் தமிழ் மக்களால் விரும்பி ஏற்றுக் கொள்ளப்படாத மாகாணசபை முறைமையைக்கூட அவர்கள் நிராகரிக்கும் போக்கே இன்றுவரை காணப்படுகிறது. அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தையும் மாகாணசபை முறைமையையும் தொடக்கத்திலிருந்தே எதிர்த்து வந்த ஜே.வி.பி தற்காலிக ஏற்பாடாக கிட்டத்தட்ட இருபது ஆண்டுகள் இணைக்கப்பட்டிருந்த வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பை உச்சநீதிமன்றத்தின் தீரப்பினூடாக நிரந்தரமாகப் பிரிப்பதில் முக்கிய பாத்திரத்தை வகித்திருந்தது. அது மட்டுமன்றி ஏலவே மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களைப் பிடுங்குவதற்கும் இவர்கள் ஆதரவளித்தே வந்துள்ளனர். 1987இல் பல்லாயிரம்பேரை காவு கொண்ட அரசுக்கெதிரான ஜே.வி.பியின் இரண்டாவது கிளரச்சியும் இம்மாகாண சபையை மையமாகக் கொண்டே தொடங்கப்பட்டது. வடக்கு- கிழக்கு பிரிப்புத் தொடர்பாக தொடர்பாக அண்மையில் ஒரு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு ஜே.வி.பி தலைவர் அனுரகுமார பதிலளிக்கையில் அது 'அரசியலமைப்பிலுள்ளதை நடைமுறைப்படுத்தும் ஒரு கடப்பாடு' என்ற வகையில் பதிலளித்திருந்தார். அதே அரசியலமைப்பில் அதே மாகாணசபை தொடர்பான உறுப்புரைகளில் மாகாண சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள காணி, காவற்றுறை அதிகாரங்கள் தொடர்பாக 35 ஆண்டுகள் கடந்தும் எவ்வகையான கடப்பாடும் அவருக்கோ அல்லது அவரது கட்சியினருக்கோ இன்னும் ஏற்படவில்லைப் போலும். அதுமட்டுமன்றி மாகாணசபை தொடர்பான இன்னொரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் "தமிழ் மக்களின் பிரச்சினைக்கு மாகாணசபை முறைமை பொருத்தமான தீர்வல்ல. எனினும் தமிழ் மக்கள் அதனை விரும்புவதால் அம்முறைமை தொடர்வதில் எமக்கு எந்த ஆட்சேபனையுமில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார். இதைத்தான் கழுவுற தண்ணியில் நழுவுற மீனைப்போல என்பார்கள். அவ்வாறானால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குப் பொருத்தமான அவர்களது தீர்வு என்ன என்பதை அவரோ அல்லது அவரது கட்சியினரோ இதுவரை வெளிப்படுத்தவில்லை. உண்மையில் ஜே.வி.பியினரைப் பொறுத்தமட்டில் தேசிய இனப்பிரச்சினையை தனித்துவமான ஒரு பிரச்சினையாக ஒருபோதும் கருதவில்லை. நாட்டில் நிலவும் பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் களையப்படும்போது தமிழர் பிரச்னைகளும் மறைந்துவிடும். அதனால் அதற்குத் தனியான முக்கியத்துவம் எதுவும் தரத் தேவையில்லை என்பதே அவர்களது நிலைப்பாடு. தங்களைப் புரட்சியாளர்களாகவும் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகவும் சித்தரிக்கும் இந்த இடதுசாரி முற்போக்குவாதிகள் பௌத்த சங்கத்தினரின் காலில் மண்டியிடவும் ஒருபோதும் பின்னிற்பதில்லை.

அடுத்த பிர்தான ஜனாதிபதி வேட்பாளர் ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸ ஆவார். ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் பிரதமராக இருந்தவரும், மாகாணசபை முறைமையை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்தவரும், மாகாணசபைக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களைப் பிடுங்கும் நிகழ்சி நிரலை தொடக்கி வைத்தவருமான முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மகன். இன்றைய நிலவரப்படி போட்டியில் முன்னணியில் இருப்பவராகக் கருதப்படுபவர். அதனால் எக்காலத்திலும் பதவியிலிருக்க விரும்பும் தமிழ், முஸலிம் தலைவர்கள் இப்போது அவருடன் இணைந்துள்ளனர். நல்லாட்சிக்காலத்தில் வடக்கு கிழக்கில் ஆயிரம் விகாரைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்த தீவிர பௌத்தன். இன்று தமிழ் மக்களின் வாக்குகளுக்காக அசியலமைப்பின் 13ஆம் திருத்தத்திலுள்ளதை முழுமையாக அமுல்படுத்துவேன் என்று வெற்று வாக்களிக்கும் சஜித் ஆட்சியிலிருந்த காலங்களில் இதற்காக ஒருபோதும் குரல் கொடுத்தவரல்லர். அதுமட்டுமன்றி தமிழ்த்தலைவர்களை ஏமாற்றும் நோக்கில் நல்லாட்சிக் காலத்தில் ரணிலால் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு மாற்ற முயற்சிகளுக்கு பலவழிகளிலும் முட்டுக்கட்டை போட்டது மட்டுமன்றி இலங்கை தொடர்பான சர்வதேச மனித உரிமைப் பேரவையின் தீர்மானங்களையும் எதிர்த்த ஒருவர். தமிழ் மக்களுக்கு எதிராக நிழ்ந்துவரும் அபகரிப்புகள், ஆக்கிரமிப்புக்கள், அடக்குமுறைகள் என்பவற்றுக்கு எதிராக ஒருபோதும் குரல் கொடுக்காதவர். இவ்வகையில் பௌத்த சங்கத்தினரதும் தீவிர பௌத்த சிங்கள இனவாதிகளினதும் விருப்பத்துக்கு மாறாக ஒரு துரும்பைக் கூட அசைக்க விரும்பாத இவர் ஜனாதிபதிப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் ராஜபக்ஷவினருக்கு எந்தவகையிலும் சளைக்காத தீவிர பௌத்த, சிங்ளத் தலைவராக இருப்பார் என்பது உறுதி.


அடுத்த வேட்பாளர், கட்சிகளால் தெரிவு செய்யப்பட்ட தற்போதைய ஜனாதிபதியும் மக்களின் தெரிவால் அப்பதவியைத் தக்கவைக்க விரும்புவருமான ரணில். தனது மாமனாரான அரசியல் குள்ளநரி எனப்படும் ஜே.ஆரின் வளர்ப்பில் உருவான இன்னொரு அரசியல் குள்ளநரியே ரணில். தனது தேவைக்கேற்ப கனகச்சிதமாக வேடம்போட்டு அனைவரையும் ஏமாற்றும் வல்லமை இவரிடமுண்டு. இல்லையெனில் தேசியப் பட்டியல் மூலம் ஒரேயொரு ஆளாக வந்து நிறைவேற்று அதிகாரத்தைக் கையிலெடுத்திருக்க முடியுமா? பேச்சிலும் நடை, உடை, பாவனையிலும் கனவான் போலக் காட்டிக் கொண்டாலும் தமிழர் உரிமை என்று வரும்போது இவரும் சிங்களவர் பக்கத்திலேயே நிற்பார். ஒரேயொரு வேறுபாடு. மற்றத்தலைவர்கள் வெறுப்புடன் நேரே குத்துவார்கள். இவர் மெதுவாகத் தடவி முதுகில் குத்துவார். விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணாவைத் தானே பிரித்ததாக மார்தட்டியவர். அரசியலமைப்பு மாற்றம் என்று கூறியே எதிர்க் கட்சியின்றி ஐந்து ஆண்டுகள் நல்லாட்சி செய்து தமிழ்த்தரப்பை ஏமாற்றியவர். காவற்றுறை அதிகாரம் மாகாண சபைக்கு வழங்க முடியாது என்று அடித்துக் கூறியதுடன் அரசினால் அபகரிக்கப்பட்ட தமிழரின் உரித்துக்காணிகளை அவர்களுக்கே குத்தகை முறையில் வழங்கலாம் என்ற தாராளவாதி? இவர் ராஜபக்ஷக்களின் பின்புலத்துடன் தேர்தலில் குதிக்க விரும்பினாலும் அவர்களுக்கு எதிரான சிங்கள வாக்குகளையும் தமிழ், முஸ்லிம் வாக்குகளையும் பெறுவதற்காகப் பொது வேட்பாளர் என்ற வேடத்தை புனையவுள்ள ரணிலின் கடந்தகாலச் செயபாடுகளும்சரி நிகழ்கால கூட்டுகளும்சரி தமிழ் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகளை இவர் வழங்க முயற்சிப்பார் என்ற நம்பிக்கையைத் தரவில்லை.

இந்தப் போட்டியாளர்கள் அனைவருமே தமிழர்கள் விடயத்தில் அடிப்படையில் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே. தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்க மனமில்லாதவர்கள். அக்கோரிக்கைகளைச் சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துக்கூறி வாக்குக் கேட்கத் திராணியற்றவர்கள். அதனைவிடுத்து எப்போதுமே தீவிர பௌத்த, சிங்களக் காவலாராகத் தம்மை இனங்காட்டிக்கொள்ள விரும்புபவர்கள். 1983 யூலை தமிழர் இனவழிப்பு நடவடிக்கையின்போது ஜே.ஆர் கூறிய 'எனக்குத் தமிழர்களைப் பற்றிக் கவலையில்லை. சிங்கள மக்களின் நலனே முக்கியம்' என்ற மனப்பாங்கு கொண்டவர்களே இவர்கள். இப்படியானவர்களுக்கு வழமைபோல இதயத்தால் இணைந்து வெற்றுக்காசோலையாக தமிழ் மக்களின் வாக்குகளை அள்ளிக் கொடுத்து மீண்டும் ஒரு முறை நாம் ஏமாறவேண்டுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுலோச்சனா அருண்

# கனடா, ரொறன்ரோவில் நூல் வெளியீட்டு விழா



கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தால் சென்ற சனிக்கிழமை ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி தமிழகக் கவிஞர் மு. முருகேஸ் அவர்களால் தொகுக்கப் பெற்ற 'மனதைத் தொட்ட எழுத்தின் பக்கங்கள்' என்ற நூலும், எழுத்தாளர் குரு அரவிந்தனின் 'சாக்லட் பெண்ணும் பண்ணைவீடும்,' 'யாதுமாகி நின்றவள்' என்ற சிறுகதைத் தொகுப்பும், மாலினி அரவிந்தனை இணையாசிரியராகக் கொண்ட 'தமிழ் ஆரம் - 2024' சிறுவர்களுக்கான சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப் பெற்றன. கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் கவிஞர் அகணி சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெற்றோர், ஆசிரியர், மற்றும் தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து கனடா தேசியப் பண், தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியன செல்வி சோலை இராச்குமார், செல்வி சென்னி இராச்குமார் ஆகியோரால் இசைக்கப்பெற்றன. தொடர்ந்து கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் திரு. அகணி சுரேஸ் அவர்களின் தலைமையுரை இடம் பெற்றது. அவர் தனது உரையில் 'உலகப் புத்தகத் தினத்தைக் கொண்டாடும் இந்த வாரத்தில் எழுத்தாளர் இணையம் இந்த நூல்களை வெளியிட்டு வைப்பதில் மகிழ்ச்சி கொள்வதாகவும், கனடிய எழுத்தாளர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கும் எழுத்தாளர் குரு அரவிந்தனைப் போல ஏனைய எழுத்தாளர்களும் தங்கள் ஆக்கங்களை வெளியிட முன்வரவேண்டும்' என்றும் குறிப்பிட்டார்.





'மனதைத் தொட்ட எழுத்தின் பக்கங்கள்' மற்றும் 'சாக்லட் பெண்ணும் பண்ணைவீடும்' ஆகிய நூல்களுக்கான வெளியீட்டுரையைத் திருமதி சசிகலா ஜீவன்ராம் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது வெளியீட்டுரையில், கவிஞர் மு. முருகேஸ் அவர்களால் தொகுத்து வெளியிடப்பெற்ற இந்த நூலில் இலங்கை, இந்தியா, கனடாவைச் சேர்ந்த 21 பிரபல எழுத்தாளர்களும், பேராசிரியர்களும், திறனாய்வாளர்களும் ஒன்று சேர்ந்து குரு அரவிந்தனின் எழுத்துக்கள் பற்றித் தங்கள் பன்முகப் பார்வையை இந்த நூலில் எழுத்தில் வடித்திருப்பதாகக் குறிப்பிட்டார். மேலும் குரு அரவிந்தனின் சிறுகதைத் தொகுப்பான சாக்லட் பெண்ணும் பண்ணை வீடும் பற்றிக் குறிப்பிடும் போது, ஆங்கில மொழி மாற்றக் கதைகளையே வாசித்து வந்த எங்களுக்கு முதன் முதலாகக் குரு அரவிந்தன் அவர்கள் நேரடியாகவே தமிழில் தந்திருக்கும் இந்த வெளிநாட்டுக் கதைகள் அற்புதமானவை, அதற்காக அவரைப் பாராட்டுகின்றேன் என்று குறிப்பிட்டார்.

அடுத்து கனடா எழுத்தாளர் இணையத்தின் பொருளாளரும், எழுத்தாளருமான கனகசபை ரவீந்திரநாதன் 'யாதுமாகி நின்றவள்' என்ற சிறுகதைத் தொகுப்புக்கான வெளியீட்டுரையை நிகழ்த்தினார். சங்க இலக்கியப் பாடல் வரிகளை எடுத்து நவீன கதைகளை உருவாக்கியிருப்பது ஆச்சரியப்பட வைப்பதாகவும், அதே நேரத்தில் கொரோனா காலத்துக் கதைகள் அந்த இழப்பை நினைத்து அழவைப்பதாகவும் குறிப்பிட்டார்.

அடுத்து தமிழ் ஆரம் - 2024 சிறப்பு மலர் பற்றி வெளியீட்டுரை நிகழ்த்திய இளைய தலைமுறையினரான

(14ம் பக்கம் பார்க்க)

---




# வியுக்தியார் பதில்கள்

**இரா. இராஜேஸ்கரன்,**
**ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** : எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பாக இப்போது அதிகம் பேசப்படுகின்றது. ஆனால் ஈபிஆர்எல்எவ் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனும், தமிழ் மக்கள் கூட்டணி தலைவர் நீதியரசர் விக்கினேஸ்வரனும் மாத்திரமே இது விடயத்தில் அக்கறை காட்டுவதாக தெரிகின்றதே?

**வியுக்தியார்:** பல்வேறு பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள் இதுவிடத்தில் கடுமையாக உழைத்து வருகின்றன. தமிழ் அரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக இன்னமும் முடிவு எடுக்கவில்லை என்றாலும், அதன் புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்ட சிவஞானம் சிறிதரன் எம்.பி.யும், மட்டக்களப்பு முன்னாள் எம்.பி.க்கள் பலரும் அதற்கு ஆதரவாக தொடர்ந்து கருத்து சொல்லி வருகின்றனர். இந்த விடயம் வெற்றிகமாக செல்வதால் தாங்கள்தான் அதனை வழிநடத்தவதுபோல காட்டிக் கொள்ள பலர் இப்போது முண்டியடிப்பது தெரிகின்றது. அதிலும் முக்கியமாக தானே இந்த யோசனையை முதல்முலில் சொன்னேன் என்றுவேறு சுரேஷ் பிரேமச்சந்திரன் உரிமை கோரியிருக்கிறார். ஆனால் அவர்கள் கட்சி அதுபற்றி பொது உடன்பாட்டுக்கு வருவதற்கு முன்னரே ஆய்வாளர் நிலாந்தன், ஊர்க்குருவி ஆகியோர் இந்த யோசனையை முன்வைத்து விட்டனர். சுரேஷ் பிரேமச்சந்திரன், இப்போதும் வேட்பாளர்களுடன் பேரம் பேசுவது பற்றியும் இடையிடையே பேசிவருகின்றார். ஆனால் இந்த பொதுவேட்பாளர் விடயத்தில் பேரம் பேசல் என்பதற்கு இடமே இல்லை என்பதில் பொது அமைப்புக்கள், சிவில் சமூகங்கள் உறுதியாக இருக்கின்றன.

---

**அ. சிவகணேஸ்,**
**மறவன்புலவு, சாவகச்சேரி.**

**கேள்வி:** பொருளாதார மறுசீரமைப்புக்காக இலங்கை தற்போது முன்னெடுத்துள்ள செயல்திட்டங்களை தடையின்றி முன்னெடுத்தால் எதிர்காலத்தில் நெருக்கடியான நிலை தோற்றம் பெறாது என்றும் மறுசீரமைப்புக்களால் இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளது எனவும் அமெரிக்க திறைசேரியின் பிரதி உதவிச் செயலாளர் றொபட் கப்ரோன், நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேம சிங்கவிடம் சுட்டிக்காட்டியுள்ளாராமே?.

**வியுக்தியார்:** : அட நீங்கள் வேற, ஐ.எம்.எவ். என்றால் என்ன அமெரிக்க திறைசேரிதானே. அவர்கள் சொல்வதையெல்லாம் கேட்டு கிளிப்பிள்ளை மாதிரி நடந்துகொண்டால், அவர்கள் இப்படிச் சொல்லாமல் வேறு எதைத்தான் சொல்வார்கள்? அதிலும் எனக்கு ஒரு சந்தேகம், நமது நிதி ராஜாங்க அமைச்சர் செஹான் சேம சிங்க யாரைச் சந்தித்தாலும் இப்படித்தானே- அதாவது நமது பொருளாதார மறுசீரமைப்புக்களைப்பற்றி சொல்கிறார்கள். ஒரு வீட்டில் நாம் சாப்பாட்டுக்குச் சென்றிருந்தால், சாப்பிட்டு முடிந்த பின்னர் சாப்பாடு அருமை என்று சொல்வோம். அதற்காக சாப்பாடு அருமையாகத்தான் இருந்தது என்று அர்த்தம் இல்லையே. அதுபோலத்தான் இவர்கள் சொல்வதுமோ தெரியவில்லையே.

---

**செல்வா. கேசவன்**
**சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** இந்தியத் தேர்தலில் தனது பிரசார உத்திகள் [illegible] தேசியக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன கட்சியுடன் இந்திய ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சி (பா. ஜ. க.) பகிர்ந்துள்ளதாமே. இதன்மூலம் இலங்கையில் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் இந்தக் கட்சிகளைகொண்ட கூட்டணி வெற்றி பெறவேண்டும் என்பதே இந்தியாவை ஆளும் கட்சியின் விருப்பம் என்பதை மறைமுகமாக உணர்த்தியுள்ளதா?.

**வியுக்தியார்:** நீங்கள் நினைப்பதுபோலவும் இருக்கலாம். அவர்கள் இந்தியாவில் எப்படி இந்துத்துவ ஆட்சியை கொண்டுவர- அல்லது இந்துத்துவ கொள்கையை வைத்து அரசியல் செய்கிறார்களோ அதேபோல, இவர்கள் எப்படி இலங்கையில் பௌத்த மதவாத ஆட்சியைக் கொண்டுவரலாம் என்று வகுப்பெடுத்தார்களோ தெரியவில்லையே. இவர்கள் இடையே அரசியல் சித்தார்ந்தத்தில் எந்த வேறுபாடும் இல்லைத்தானே?

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** : ஐக்கிய மக்கள் சக்தி மேதினக் கூட்டத்தை ஏற்பாடு செய்ததில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எந்தப் பங்கையும் வகிக்கவில்லை என்றும் அதனால்தான் அவருக்கு அந்த மே தினக் கூட்டத்தில் எந்த முக்கியத்துவமும் வழங்கப்படவில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளதே. கூட்டத்திற்கு எதாவது வகையில் பங்களிப்பு செய்தவர்களுக்கு மாத்திரம்தான் அந்தக் கூட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது என்றால், அப்போ சஜித்தும் ஏதும் பங்களிப்புச் செய்திருப்பாரோ?

**வியுக்தியார்:** இல்லாமல், அவரைப் பார்க்கவும் அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்கவும்தானே அண்ணளவாக இருபத்திஐயாயிரம் பேர் அங்கே வந்திருந்தார்கள். அது அவரின் பங்களிப்புத்தானே?. இதுவல்ல நாம் கவனிக்க வேண்டியவை, அந்தக் கூட்டத்தில் சரத் பொன்சேகாவுக்கு மாத்திரம் அல்ல, மேலும் பல முக்கிய தலைவர்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படவில்லையே. அப்படியெனில் அவர்களும் கூட்டத்திற்கு பங்களிக்கவில்லை என்கிறார்களா? அல்லது, மைத்திரி காலையில் மகிந்தவோடு அப்பம் சாப்பிட்டுவிட்டு மாலையில் ரணிலோடு போய் தேர்தலில் போட்டியிட்டதுபோல, இன்று மே தினத்தில் நின்றுவிட்டு நாளை ரணிலோடு போய்விடுவார்கள் என்ற பயத்தில் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லையா என்பது சில நாட்களில் தெரியவந்துவிடும்தானே?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# டில்லி - கன்பரா அரசியலில் முரண்படாத முறுகல்!

## ஆஸியில் நாடு கடத்தப்பட்ட இந்திய உளவாளிகள்!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

அவுஸ்திரேலியாவின் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் விமான நிலையப் பாதுகாப்பு தொடர்பான முக்கியமான தகவல்களைத் திருட முயன்ற இந்திய உளவாளிகள் அவுஸ்திரேலியாவில் இருந்து வெளியேற்றப்பட்டதாக ஏபிசி நிறுவன தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா எப்போதும் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியாவுடன் நல்லுறவு - பாதுகாப்பை பேணி வருகிறது. இந்தோ-பசிபிக் பகுதியில் சீனாவின் இராணுவக் கட்டமைப்பின் வளர்ச்சி அதிகரித்து வரும் முக்கிய பாதுகாப்பு பங்காளியாக இந்தியா கருதப்படுகிறது.




### "ஒற்றர்களின் கூடு" வளையமைப்பு:

அவுஸ்திரேலியாவின் உளவு அமைப்பான யுளுஐழு டைரக்டர் ஜெனரல் மைக் பர்கெஸ், 2021 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தனது வருடாந்த மதிப்பீட்டில் இந்த உளவு வளையத்தை முதன் முதலில் குறிப்பிட்டார். ஆனால், எந்த நாடு நடவடிக்கைக்குப் பின்னால் இருந்தது என்பதை அவர் வெளியிடவில்லை.

இந்திய உளவுகாரர்கள் தற்போதைய மற்றும் முன்னாள் அரசியல்வாதிகள், வெளிநாட்டு தூதரகம் மற்றும் மாநில பொலீஸ் சேவை ஆகியவற்றுடன் நல்ல உறவுகளை வளர்த்துக் கொண்டனர், என மைக் பர்கெஸ் கான்பெராவில் கூறினார்.

அத்துடன் அவர்கள் தங்கள் நாட்டின் புலம்பெயர் சமூகத்தை இங்கே கண்காணித்தனர். அத்துடன் அவுஸ்திரேலியாவின் வர்த்தக உறவுகள் பற்றிய இரகசிய தகவல்களைப் பெற முயன்றனர். பாதுகாப்பு தொழில் நுட்பத்தின் முக்கிய விவரங்களை அணுகக்கூடிய அவுஸ்திரேலிய அரசாங்க பாதுகாப்பு அனுமதி வைத்திருப்பவரை "ஒற்றர்களின் கூடு" எவ்வாறு வெற்றிகரமாக பணியமர்த்தியது என்பதையும் திரு பர்கெஸ் விவரித்தார்.

"ஒற்றர்களின் கூட்டிற்கு" இந்தியாவின் வெளிநாட்டு உளவுத்துறை பொறுப்பு என்பதை தேசிய பார்துகாப்பு மற்றும் அரசாங்க புள்ளிவிவரங்கள் ஏபிசிக்கு உறுதிப்படுத்தியுள்ளன. ஏஎஸ்ஐஓவின் எதிர்-உளவுத்துறை நடவடிக்கையைத் தொடர்ந்து 2020 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவில் இருந்து 'ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவு" எனப்படும் இந்திய உளவுத்துறை அமைப்பின் இரண்டு உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டனர்.

### மழுப்பும் மனப்பான்மை ?

ஆயினும் இத்திடுக்கிடும் தகவல் வந்த போதும் மழுப்பும் மனப்பான்மையில் அவுஸ்திரேலியா அரசின் உயர் அமைச்சர் கருத்து தெரிவித்துள்ளார். நாங்கள் இந்தியாவுடனும், பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளுடனும் நல்ல உறவை பேணுகிறோம். முக்கியமாக பொருளாதார உறவை மேலும் வலுப்படுத்துகிறோம் என்று மத்திய அரசின் பொருளாளர் ஜிம் சால்மர்ஸ் ஏபிசி டிவிக்கு தெரிவித்தார்.

இந்திய உளவுத்துறையின் வெளிப்பாடுகள் இரு நாட்டு உறவுகளை மீறி இருந்தபோதிலும், அவுஸ்திரேலியா-இந்தியா உறவுகள் தொடர்ந்து பாதுகாக்கப்படும் என கன்பரா உயர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2023 இல் கனடா, இந்திய அரசாங்கத்திற்கும், இந்தியாவில் தனி மாநிலத்தை ஆதரித்த கனேடிய சீக்கிய சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கும் இடையிலான தொடர்புகள் குறித்து பகிரங்கமாக கண்டனங்கள் எழுந்தன.

கனடாவில் சீக்கிய தலைவரை இந்திய உளவு அமைப்பு கொன்றதாக இருநாட்டு உறவுகளில் பாரிய முறுகல் நிலமை ஏற்பட்டது. இதனைப் போல இந்திய -அவுஸ்திரேலியா உறவுகளில் முரண்பாடுகள் ஏற்படாமல் இருக்க இரு நாடுகளும் தீவிரமாக முயல்கின்றன.



### புது டெல்லியுடன் "நல்ல உறவு"

இந்திய உளவு நடவடிக்கையின் அறிக்கைகள் வெளிவந்த பின்னரும் கான்பெராவில் அவுஸ்திரேலியா அரசு புது டெல்லியுடன் 'நல்ல உறவை" வெளிப்படுத்தியுள்ளது.

இந்திய உளவாளிகளின் கூடு (Nest of Spies) என கூறப்படும் இந்த விவகாரத்தால் இரு அரசினதும் புலனாய்வு அமைப்புகளின் பரஸ்பர உறவை சீர்குலைக்கப்பட்டது என்பது உண்மையே.


இதனை பல்வேறு தகவல்கள் வெளிப்படுத்திய போதிலும், தற்போதைய மற்றும் முன்னாள் அமைச்சர்கள் இந்தியாவுடனான அவுஸ்திரேலியாவின் உறவுகளை மேம்படுத்த உடனடியாக ஆதரித்துள்ளனர்.

ஆனாலும் முன்னைய அரசில், அந்த நேரத்தில் உள்துறை அமைச்சராக இருந்த எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன், உளவுத்துறை அறிக்கைகள் குறித்து கருத்து தெரிவிக்கவில்லை. ஆனால் 'வெளிநாட்டு தலையீட்டால் நாங்கள் மிகவும் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை எதிர் கொள்கிறோம்" என்பது தெளிவாக உள்ளது என்று குறிப்பிட்டார்.



ஏன் எனில் இந்த உளவுப் பிரச்னை அவர்களின் ஆட்சியிலேயே ஆரம்பமானதாக தகவல்களும் உண்டு.

அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்காவை உள்ளடக்கிய குவாட் அமைப்பில் இந்தியா ஒரு முக்கிய அங்கமாக உள்ளது. இப்பிராந்தியத்தில் முக்கியமான பங்காளியாக உள்ளனர். ஏனெனில் அவுஸ்திரேலியாவில் உள்ள அதே ஜனநாயக விழுமியங்களை இந்தியாவும் பகிர்ந்து கொள்கிறது என்று எதிர்கட்சித் தலைவர் கூறியுள்ளார்.



இவர்கள் அனைவரும் நாங்கள் மிக நெருக்கமாக பணியாற்றுவதற்கு முக்கியமான கூட்டாளிகள், மேலும் உறவில் சிக்கல்கள் இருந்தால், அவர்கள் சரியான முறையில் சமாளிக்க வேண்டும். புலனாய்வு விவகாரங்கள் குறித்து தற்போதய வெளியுறவு அமைச்சர் பென்னி வோங் கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியா பொதுவான கொள்கைகளின் அடிப்படையில், அவுஸ்திரேலியாவின் நலன்களுக்கும், அனைத்து ஈடுபாடுகளிலும் நமது மதிப்புகளுக்கும் நிலையானதாக உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய 'உளவாளிகளின் கூடு' 2020 இல் ஆஸி உளவு அமைப்பை குறிவைத்து செயல்பட்டது. அத்துடன் உள்ளூர் அரசியல்வாதிகள், வெளிநாட்டு தூதரகம் மற்றும் மாநில காவல்துறை சேவையுடன் உறவுகளை குறிவைக்க முயன்றது.

அத்துடன் பாதுகாப்பு தொழில்நுட்பத்தின் ரகசிய விவரங்களை அணுகக்கூடிய அவுஸ்திரேலிய அரசாங்க பாதுகாப்பு அனுமதி வைத்திருப்பவரை வெற்றிகரமாக இந்தியா ஆட்சேர்ப்பு செய்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அவுஸ்திரேலியாவில் உள்ள ஒரு பெரிய விமான நிலையத்தில் பாதுகாப்பு நெறிமுறைகள் பற்றிய தகவலை ஒரு பொது ஊழியரிடம் இந்திய உளவு அமைப்பு கேட்டறிந்தது.

### மோடிதான் 'பாஸ்' மாறுமா ?

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2023 ஆம் ஆண்டு மே மாதம் அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்து, புலம்பெயர்ந்த இந்தியர்களுடன் சிட்னியில் பல பெரிய நிகழ்வுகளை நடத்தினார்.

சிட்னியில் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அவுஸ்திரேலியாவின் பல பகுதிகளில் இருந்தும் 'மோடி ஏர்வேஸ்', 'மோடி எக்ஸ்பிரஸ்' என்று பெயர் சூட்டப்பட்ட சிறப்பு விமானங்கள், ரயில்களில் இந்திய வம்சாவளியினர் சிட்னி நகருக்கு வந்து கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானிஸ் அப்போது, "சிட்னியில் இந்திய பிரதமர் மோடிக்கு வரலாறு காணாத வரவேற்பு கிடைத்திருக்கிறது. உண்மையில் மோடிதான் 'பாஸ்' (Boss). அவுஸ்திரேலியாவின் வளர்ச்சியில் இந்திய வம்சாவளியினரின் பங்களிப்பு அதிகரித்து வருகிறது" என்றும் அவர் குறிப்பிட்டமை பலருக்கும் நினைவிருக்கும். ஆயினும் தற்போது எழுந்துள்ள முரண்பாடு எதுவரை நீடிக்கும் என எவருக்கும் புலப்படவில்லை.

### அவுஸ்திரேலிய -இந்திய பொருளாதாரம்:

அவுஸ்திரேலியாவில் இருந்து இந்தியாவின் இறக்குமதி 17 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ள நிலையில் ஏற்றுமதி 10.5 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது. இருப்பினும், அவுஸ்திரேலியாவில் இருந்து இந்தியா செய்யும் இறக்குமதியில் பெரும்பான்மையானவை (96 வீதம்) மூலப்பொருட்கள் மற்றும் இடைநிலை பொருட்கள் ஆகும்.

அதிலும் குறிப்பாக நிலக்கரி அதிக அளவில் (அவுஸ்திரேலியாவின் இந்தியாவுக்கான ஏற்றுமதியில் 74 வீதம்) இறக்குமதி செய்யப்படுகிறது. இதில் 71.4 வீதம் கோக்கிங் நிலக்கரி ஆகும். மறுபுறம், அவுஸ்திரேலியாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதியில் முழுமையாக உற்பத்தி செய்யப்பட்ட தயாரிப்புகளான நுகர்வோர் பொருட்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன.

அவுஸ்திரேலியாவில் பயிலும் மாணவர்களின் கல்விக்காக ஒவ்வொரு ஆண்டும் சுமார் 4 பில்லியன் டாலரை இந்தியாவும் செலவழிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ. எல். மாணவர் நலன் கருதி

# ஒலிபெருக்கி பாவனையை கட்டுப்படுத்த கோரிக்கை

வவுனியா, மே 05
வவுனியா மாவட்டத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்காக கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஒலிபெருக்கிகள் சமய வழிபாட்டுத் தளங்களிலும், பல்வேறு வைபவங்களிலும் விழாக்களிலும் பயன்படுத்தப்படுவது மாணவர்களுக்கு இடையூறாக இருப்பதாக சுகாதாரப் பிரிவினர், நகரசபை, பொலிஸ் திணைக்களம், மாவட்ட செயலகம் ஆகியவற்றிக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இவ்வாறான ஒலிபெருக்கிப் பாவனையை கட்டுப்படுத்துமாறும் இடையூறுகள் ஏற்படுத்தும் வகையில் இடம்பெறும் ஒலிபெருக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் உரிய ஒழுங்கு விதிகளையும் சட்ட ஏற்பாடுகளையும் பொலிஸார் நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நாளை 06 ஆம் திகதி ஆரம்பமாகி 15 ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ)

## மனைவியை தாக்கிய கணவன்மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு!

வாதுவை, மே 05
வாதுவை, மொல்லிகொட பிரதேசத்தில் நேற்றுச் சனிக்கிழமை பிற்பகல் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டது.

கண்ணாடி போத்தல் ஒன்றால் தனது மனைவியைத் தாக்கி காயப்படுத்திய சந்தேகநபரொருவரை கட்டுப்படுத்த முயன்றபோதே பொலிஸாரால் இந்தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதாக வாதுவை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த சந்தேகநபர் பாணந்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினார்.

கண்ணாடி போத்தல் ஒன்றால் தனது மனைவியைத் தாக்கிக் காயப்படுத்திக்கொண்டிருந்த நிலையில், பிரதேசவாசிகள் மூலம் தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

இதன்போது பொலிஸார் குறித்த நபரைக் கட்டுப்படுத்துவதற்காக வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட போதும் அந் நபர் கட்டுப்படாததால் வேறு வழியின்றி அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வாதுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# 35 வீதமான பாடசாலைகளில் டெங்கு நுளம்பின் தாக்கம்

### பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு பாதிப்பு

கொழும்பு, மே 05
கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் நிலையங்களில் சுமார் 35 வீதமான பாடசாலைகளில் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நுளம்பு தாக்கம் உள்ள பாடசாலைகளை அடையாளம் கண்டு துப்புரவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை நேற்றும் இன்றும் விடுமுறை நாட்களிலும் மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிகாரிகளுக்கும் பெற்றோருக்கும் அறிவுறுத்தியுள்ளதாக குறித்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார். (எ)

## வெப்பத்தால் சடுதியாக குறையும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம்

ஹற்றன், மே 05
கடும் வெப்பம் காரணமாக காசல்ரீ மற்றும் மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளது.

காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 44 அடியாகவும், மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 49 அடியாகவும் குறைந்துள்ளதாக பொறியியலாளர்கள் தெரிவித்தனர். (எ)

## கனடா, ரொறன்ரோவில்...

(12ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வி. அர்ச்சயா வீரபத்திர ஐயர் தனது உரையில் சிறுவர்களுக்கும், இளைய தலைமுறையினருக்குமான இது போன்ற தமிழ் சார்ந்த இதழ்கள் தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என்பதைக் குறிப்பிட்டுப் பெற்றோர் ஆசிரியர்களின் ஒத்துழைப்பு இதற்கு மிகவும் அவசியமானது என்பதையும் குறிப்பிட்டார்.

முதற்பிரதி, சிறப்புப் பிரதிகளை முறையே பேராசிரியர் இ. பாலசுந்தரம், டாக்டர் கதிர்துரைசிங்கம், ஆனந் அரவிந்தன், வைஸ்ணவி ஜெயக்குமார், கிராமத்து வதனம் பெண்கள் அமைப்புத் தலைவி திருமதி கமலவதனா சுந்தா ஆகியோர் பெற்றுக் கொண்டனர். எழுத்தாளர் குரு அரவிந்தனின் ஏற்புரையுடன் விழா சிறப்பாக முடிவுற்றது.

# விண்ணப்பிக்காத பாடம் வந்ததால் மாணவர்கள் மத்தியில் குழப்பம்

கொழும்பு, மே 05
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு இரண்டாம் முறை விண்ணப்பித்த 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர், அதாவது தனியார் விண்ணப்பதாரர்கள், தாங்கள் விண்ணப்பிக்காத பாடத்துக்கான அனுமதி அட்டை கிடைக்கப் பெற்றதால் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை, தொழில்நுட்ப பிரச்னையால் ஏற்பட்ட சிக்கல்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

2023 கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மே மாதம் 06 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த ஆண்டு பரீட்சைக்கு 4 இலட்சத்து 52 ஆயிரத்து 979 பேர் விண்ணப்பித்துள்ளனர். அதில் 65 ஆயிரத்து 331 பேர் தனியார் விண்ணப்பதாரர்கள்.

இது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடம் வினவியபோது, இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் உரிய பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றாமல் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படவில்லை எனவும் கூறினார்.

(எ)

# மேதினப் பேரணிகளின் அரசியல்...

(08ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை அமைப்பதற்கு தாங்கள் தயாராகிவிட்டதாகக் கூறினார்.

சிறிசேனவின் தலைமையின் கீழ் கடுமையாகப் பலவீனமடைந்து தற்போது சந்திரிகா குமாரதுங்கவின் தலையீட்டை அடுத்து மேலும் பிளவடைந்திருக்கும் அந்த கட்சியின் ஒரு பிரிவின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் சூதாட்டத்தில் எதற்காக நீதியமைச்சர் இறங்கினார் என்பதை விளங்கிக்கொள்ளமுடியவில்லை. அதன் பின்னணியில் அந்தரங்க நோக்கம் ஒன்று இருக்கலாம் என்று சந்தேகிக்காமலும் இருக்கமுடியவில்லை.

தேர்தல் பிரசாரங்களின் அமர்க்களமான ஒரு தொடக்கமாக அமைந்த மேதினப் பேரணிகளின் மூலமான செய்திகள் இவ்வாறாக இருக்கையில், ஜனாதிபதி விக்கிரமசிங்க எப்போது தேர்தலில் போட்டியிடும் தனது முடிவை அறிவிப்பார் என்ற கேள்வி எழுகிறது. தனது அறிவிப்பைச் செய்வதற்கு பொருத்தமான(சுப) நேரம் எதுவென்று அவர் நினைக்கிறார்?

கனடாவில் வசிக்கும் இலங்கை அரசியல் ஆய்வாளரான ராஜன் பிலிப்ஸ் கடந்த வாரம் 'சண்டே ஐலண்ட்' பத்திரிகையில் தனது வழமையான பத்தியில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவைப் பற்றி ஒரு சுவாரஸ்யமான வர்ணனையைச் செய்திருந்தார்.

'ரணில் விக்கிரமசிங்கவின் நட்சத்திரமும் அதிர்ஷ்டமும் வித்தியாசமானவை. அவை மேலும் உயர்ந்துகொண்டு போகவும் கூடும். பாராளுமன்றத்தில் அவருக்கு கட்சி ஒன்று இல்லை என்றாலும் பாராளுமன்றத்தை தனது முற்றுமுழுதான கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார். தேர்தல் பிரசாரங்களைகள் துடிப்புடன் முன்னெடுக்க அவரிடம் பலமான கட்சி இல்லை. ஆனால் அது அவருக்கு கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு பல்வேறு கட்சிகளிடமிருந்து ஆதரவைத் தேடுவதற்கும் அரசாங்கத்தின் பொது வேட்பாளராக தன்னை முன்னிலைப்படுத்துவதற்கும் சுதந்திரத்தை அவருக்கு கொடுக்கிறது. அவர் ஒரு புதிய அரசியல் மிருகம்."

# தாமதம் என்னும் தற்கொல்லி...

(06ம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் 'கடமை கண் போன்றது' என்றும், எதுகை மோனை கருதி சொல்லி வருகிற நாம், 'காலம் உயிர் போன்றது' என்பதையும், 'அது இயக்கும் உடல் போன்றது கடமை' என்பதையும் உணர்வதற்குள் காலம் நம்மைக் கடந்துவிடுகிறது. நிகழும் காலத்தை, எதற்கும் பயன்படுத்தாமல் கொன்றுவிட்டு இறந்தகாலம் என்கிறோம். இணைந்து இயங்காமல் ஏக்கங்களையும் அபிலாஷைகளையும் நிறைத்துவைத்துக் கொண்டு எதிர்காலம் வருமென்று காத்திருக்கிறோம்.

'உழுகிற நாளில் ஊருக்குப் போனால், அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை' என்கிற பழமொழி, 'பசிக்கிறபோது உணவிருக்காது' என்பதை மறைமுகமாய்ச் சுட்டிக்காட்டி, கடமையாற்றத் தவறிய காலத்தை முன்வைத்துச் சோம்பேறித்தனத்திற்குச் சூடு வைக்கிறது.

இன்றைக்கு ஃபுட் பாய்ஸன்' என்ற சொல்லைப் பல நிலைகளில் பயன்படுத்தி வருகிறோம். அதாவது உணவே நஞ்சாகி உயிருக்கு உலை வைத்துவிடுகிறது. உயிர் காக்கும் உணவாக்கத்தான் உலை வைக்கவேண்டுமே ஒழிய, உணவே உயிருக்கு உலை வைப்பதாகப் போவதன் காரணம் என்ன?

உணவுப் பண்டங்களை உரிய பொழுதுக்குள் பயன்படுத்தாவிடில் கெட்டுப்போய்விடுவதல்லாது, தான் சார்ந்த பண்டங்களையும் கெடுத்துவிடும் என்பது நடைமுறை உண்மை. அமுதாகிய உணவு நஞ்சாகும் ஆபத்து அப்போது நிகழ்கிறது.

'அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு' என்கிற பழமொழியில் சொல்லப்படும் அளவு, அமுதமான உணவின் அளவு மட்டுமல்ல, அதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய கால அளவும் கூட. என்னதான் உயிர் காக்கும் மருந்தாயினும், காலாவதியாகிவிட்டால், அது பயன்படாது அல்லவா? பயன்படுத்தினால் பக்க விளைவுகள் நேரும் அல்லவா?

அதுபோல்தான் உரிய காலத்திற்குள் செய்து முடிக்காத பல செயல்கள் அரிய செயல்களை ஆற்றவிடாது தடுத்து நிறுத்திவிடுகின்றன. அவசரமாகச் செய்ய வைத்துத் தவறுகளின் மலினமாகத் தரமிகு வாழ்வைக் குலைத்து விடுகின்றன.

வாழ்வியல் காலத்தில் ஐந்து மணித்துளிகள் அப்படியொன்றும் பெரிய அளவுடையவை இல்லைதான். ஆனால், அதற்குள் மருந்து தந்து காக்கத் தவறிய நோயாளிக்கு அது உயிர்ப்பிரச்னை அல்லவா?

ஐந்து மணித்துளிகளில் தவறவிட்ட ரயிலையும் விமானத்தையும் பிடிக்க முடியாவிட்டாலும், அடுத்துவரும் வாகனங்களைக் கொண்டு அந்தப் பயணத்தை மேற்கொண்டுவிடலாம். ஆனால், தவறவிட்ட பொழுது திரும்ப வருமா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிறுகுற்றங்களில்...

இருப்பவர்கள் மன ரீதியாக பாதிக்கப்படுவதுடன், அவர்கள் சமூகத்தில் பெரும் குற்றவாளிகளாகவே சித்திரிக்கப்படுகின்றனர்.

அவ்வாறான நிலைமையை மாற்றி, சிறு குற்றங்களுக்காக கைது செய்யப்படுபவர்களை சிறையில் அடைக்காமல் வீட்டுக்காவலில் வைக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சம்பந்தப்பட்டவர்களை அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைத்து, ஆவணம் ஒன்றை தயாரித்து அதன் அடிப்படையில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஸ குறிப்பிட்டார். (அ)

## ரணில்...

கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வ தேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை வெற்றியடையச் செய்து நாட்டின் பொருளாதார ஸ்திரத் தன்மையை பாதுகாக்க அரசுடன் உடன்படிக்கை செய்துகொள்ள முன்வருமாறு ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி உள்ளிட்ட அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில் கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க-

ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட நாம் தயாரில்லை. எமது கட்சியை அவர் அழித்தார். புதிய தலைவர்களை உருவாக்க இடமளிக்கவில்லை. இதனால் எமது கட்சி உறுப்பினர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ரணிலுடன் எமக்கு எவ்வித கொடுக்கல்-வாங்கலும் இல்லை. பலமான அரசியல் கூட்டணியாக தேர்தலை எதிர்கொண்டு வெற்றி பெறுவோம்-என்றார். (அ)

## கோட்டாபயவின்...

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் மீண்டும் பதில் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

கர்தினால் தாம் தொடர்பில் முன்வைத்த கருத்துக்கள் உண்மைக்கு புறம்பானவை எனவும், அதனை முற்றாக நிராகரிப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கடந்த 25ஆம் திகதி அறிக்கை ஒன்றை விடுத்து அறிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், இதற்கு பதிலளித்துள்ள கர்தினால் மல்கம் ரஞ்சித், தாம் கூறிய கருத்துக்கள் உண்மையானவை என தெரிவித்துள்ளார்.

அத்துடன், முஸ்லிம் பயங்கரவாத அமைப்புகள் மட்டுமன்றி ஏனைய அமைப்புக்களையும் தடை செய்ய வேண்டும் என்ற ஜனாதிபதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் தமக்கு எவ்வித சிக்கலும் இல்லை என முன்னாள் ஜனாதிபதி தம்மிடம் கூறியதாகவும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய அவ்வாறானதொரு விடயத்தை தம்மிடம் கூறவில்லையென்றால் மனச்சாட்சிப்படி இவ்வாறான குற்றச்சாட்டை தம்மால் முன்வைக்க முடியாது எனவும் பேராயர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கோட்டாபயவினால் ஆரம்பிக்கப்பட்ட ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான விசாரணைகளை ஒடுக்கும் நடைமுறையை தற்போதைய அரசாங்கம் தொடருகின்றமை தெளிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விமர்சனம் தொடர்பில் சுதந்திரமான, வெளிப்படையான மற்றும் நேர்மையான விசாரணை தேவை எனவும், அவ்வாறான ஒரு விடயம் முடியும் வரை தாம் காத்திருப்பதாகவும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார். (அ)

## நாமல்...

மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க இதுவரை தமது கட்சியின் ஆதரவைக் கோரவில்லை எனவும் மகிந்த கூறினார்.

இதன்போது, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இன்னும் காலம் காத்திருக்க வேண்டும்- என்றார்.

கொழும்பு வெள்ளவத்தையில் இடம்பெற்ற மத நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய சில கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே மகிந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## மருந்துகள்...

பணிப்பாளர் நாயகம் ஜி. விஜேசூரியவிடம் வினவியபோது, வைத்தியசாலைகளில் இதுவரையில் 20 வீதமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுதாக தெரிவித்தார். எவ்வாறாயினும், அதற்கு மாற்று மருத்துகள் நாட்டில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், வைத்தியசாலைகளில் அரிதாக தேவைப்படும் 115 வகையான மருந்துகளுக்கு தட்டுபாடுகள் நிலவுவதாகவும் அவற்றை கொள்வனவு செய்வதற்கான நிதி மற்றும் அனுமதிகளை வைத்தியசாலைகளுக்கு பெற்றுக்கொடுத்துள்ளதாகவும் வைத்தியர் ஜி.விஜேசூரிய கூறினார். (அ)

## ஜப்பானிய...

அத்தோடு, இலங்கையை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெ டுத்து நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வரும் வேலைத்திட்டம் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்படும் பொருளாதார மறுசீரமைப்புக்களுக்கும் ஜப்பான் அமைச்சர் ஆதரவு வெளியிட்டார்.

இரு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஜப்பானிய வெளிவிவகார அமைச்சருக் கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக் கும் இடையிலான சந்திப்பு நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையில் கடன் மறுசீரமைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விரைவில் கைச்சாத்திடுவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப் பட்டது.

பெண்களின் உரிமைகள் மற்றும் பாலின சமத்துவத்துக்கு தொடர்ந்து முன்னுரிமை வழங்கி வரும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர், அதற்காக இலங்கையில் மேற்கொள்ளப்படும் புதிய சட்டத் திருத்தங்கள் உள்ளிட்ட சாதகமான நடவடிக்கைகளுக்கும் தனது ஆதரவை வெளிப்படுத்தினார்.

இதன்போது, இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான வரலாற்று உறவை நினைவுகூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் வகையில் ஒத்துழைப்புக்களை பலப்படுத்திக் கொள்வதே தனது நோக்கமாகும் என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட வேளையில் ஜப்பான் அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்புக்கும் ஜனாதிபதி நன்றி கூறினார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எச். எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் சர்வதேச விவகாரப் பணிப்பாளர் தினுக் கொழும் பகே ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

## கடன் வழங்குநர்...

குழுவினருக்கும் இடையில் வெகுவிரைவில் இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்ப்பதாகவும், இருப்பினும் அந்த இணக்கப்பாடு வெளிப்படைத்தன்மை வாய்ந்த முறையில் அடைந்துகொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இரு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பான் வெளி விவகார அமைச்சர் யொகோ கமிகவா மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோரின் கூட்டு ஊடக சந்திப்பு நேற்று சனிக்கிழமை கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது.

அங்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் யொகோ கமிகவா மேலும் கூறியதாவது:

இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஜப்பானுக்கு இலங்கை வழங்கிய ஊக்கமும், சமாதானத்தைக் கட்டியெ ழுப்பல், புனர்வாழ்வளித்தல் மற்றும் மீள்கட்டியெழுப்பல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட இலங்கையின் முயற்சிகளுக்கு யஸூஷி அகாஷி தலைமையில் ஜப்பானால் வழங்கப்பட்ட ஆதரவும் இரு நாட்டு மக்களினதும் நினைவலைகளில் இருக்குமென நம்புகிறேன்.

கடந்த ஜனவரி மாதம் ஜப்பானின் நோட்டோ பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்ட வேளையில், இலங்கை எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவிகளை வழங்கியது.

அதேவேளை இரு வருடங்களுக்கு முன்னர் இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுத்திருந்த வேளையில், இலங்கை மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் ஜப்பான் பல்வேறு உதவித்திட்டங்களை வழங்கியது.

அதுமாத்திரமன்றி உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுக்கு இணைத் தலைமை வகிக்கும் ஜப்பான், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் முன்னெடுக்கப்படும் சர்வதேச மட்டத்திலான பேச்சுவார்த்தைகளுக்குத் தலைமை தாங்குகிறது.

இந்து சமுத்திர பிராந்தியத்தின் கேந்திர நிலைய முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்திருக்கும் இலங்கையில் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பன மீளுறுதிப் படுத்தப்படுவது ஒட்டுமொத்த இந்து - பசுபிக் பிராந்தியத்தினதும் உறுதிப்பாடு மற்றும் சுபீட்சம் என்பவற்றுக்கு இன்றியமையாததாகும்.

"நண்பன் என்ற ரீதியில் ஜப்பான் இலங்கைக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கும்" என்ற செய்தியை கூறுவதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன். அதற்கமைய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடனான சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை செயற்திறன் மிக்க வகையில் மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்ந்தோம்.

இலங்கைக்கும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவினருக்கும் இடையில் வெகுவிரைவில் இரு தரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப் படுமென நாம் எதிர் பார்க்கின்றோம். இருப்பினும் அனைத்துக் கடன் வழங்குநர்களுடனான கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடானது வெளிப்படைத் தன்மை வாய்ந்த முறையில் அடையப்படவேண்டும்.

மேலும், தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி இலங்கை அரசாங்கத்தினால் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு ஜப்பான் ஆதரவளிக்கும்.

இலங்கையினால் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் பலதரப்பட்ட மறுசீரமைப்புக்கள் நாட்டின் பொரு ளாதாரத்தை மீண்டும் வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்கு இன்றியமையாதவையாகும்-என்றார். (அ)

## மே15இல்...

ஆனால், ஜூன் இரண்டாம் வாரம் வரை தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்படாது என அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதிய மின்சாரச் சட்டத்தை ஜூன் முதல் வாரத்தில் நிறைவேற்ற வேண்டும் என்பதால் அதற்கு முன் எக்காரணம் கொண்டும் பாராளுமன்றம் கலைக்கப் படமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதன் பின்னரே எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் அதற்கான அறிவிப்புகள் வெளியாகும். என்றாலும், முன்கூட்டியே பாராளுமன்றத் தேர்தல் நடத்துவது குறித்து அரசாங்கம் இதுவரை எவ்வித கலந்துரையாடல்களையும் நடத்தவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்தவேண்டும் என்பது ஆளுங்கட்சியான பொதுஜன பெரமுனவின் கோரிக்கையாக உள்ளது.

ஆனால், அதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இதுவரை பச்சைக்கொடி காட்டவில்லை. (அ)

## தலைமன்னாரில்...

ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நில இணைப்பு வழித்தடத்தை அமைப்பது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றி வருவதோடு, உரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், ஒரு விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும், அதனை நிறைவேற்றி முடிக்க பல ஆண்டுகள் தேவைப்படும் என்று சந்தோஷ் ஜா குறிப்பிட்டார்.

நில வழித்தட திட்டத்திற்கு மேலதிகமாக தென்னிந்தியாவில் இருந்து திருகோணமலைக்கு எண்ணெய் குழாய் அமைப்பது உட்பட எரிசக்தி துறையின் கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படு கின்றன.

இந்த நிலையில் தலைமன்னாரிலிருந்து கிழக்கு மாகாணத்துடன் எண்ணெய் குழாய் இணைப்பதே இந்தியாவின் நோக்கமாகும் எனவும் இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா குறிப்பிட்டார்.

## வீஸா...

மூலம் சமர்ப்பிக்கவேண்டும்.

இது முன்னர் பயன்படுத்தப்பட்ட அரசாங் கத்தால் இயக்கப்பட்ட மின்னணு பயண அங்கீகார அமைப்பை மாற்றுகிறது.

இந்நிலையில், புதிய செயன் முறையில் சுற்றுலாப் பங்குதாரர்கள் பல சிக்கல்கள் இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இதன்படி, மின்னணு பயண அங்கீகார அமைப்பு மூலம் முன்பு கிடைத்த ஒற்றை நுழைவு 30 நாள் விஸா இனி வழங்கப்படாது.

தற்போது, ஆறு மாத பல நுழைவு விசா மட்டுமே 100.77 டொலர் கட்டணத்தில் கிடைக்கிறது. இந்த விஸா கட்டணம், ஆசியாவிலேயே மிக அதிகமான கட்டணமாகும்.

இது, இலவச அல்லது மலிவான விஸாக்களை வழங்கும் பிராந்திய போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை தடுக்கிறது.

அத்துடன், புதிய இணையத்தளத்தின் விண்ணப்பச் செயல்முறை சிக்கலானது என்று தொழில்துறை பங்குதார்கள் விமர்சித்துள்ளனர்.

இதன் காரணமாக. 2024ஆம் ஆண்டில் தொழில்துறையின் 2.3 முதல் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் என்ற எதிர்ப்பார்க்கப்பட்ட இலக்கு பாதிக்கப் படலாம் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்

எனவே, முன்னரைப் போன்றே, அரசாங்க இணையத்தளம் மூலம் பயனர் நட்பு விஸா செயல்முறையை நடைமுறைப்படுத்துமாறு அவர்கள் ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# உக்ரைன்-ரஷ்ய போர் களத்தில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்கள்

## காப்பாற்றுமாறு கண்ணீர் விட்டு கதறல்

கொழும்பு, மே 05

**உள்ளூர் முகவர்களினால் ஏமாற்றப்பட்டு உக்ரைன் - ரஷ்ய போர்க்களத்தில் தள்ளப்பட்டுள்ளதாக ரஷ்ய படையில் கூலிப் படையாக செயற்பட்ட இலங்கை இராணுவத்தின் ஓய்வுபெற்ற வீரர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

**இந்நிலையில், உள்ளூர் முகவர்களின் போலி வாக்குறுதிகளுக்கு ஏமாற வேண்டாம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.**

உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்ய படையில் கூலிப்படையாக செயற்பட்ட தனது கசப்பான அனுபவங்களை ஊடகம் ஒன்றிடம் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில், தம்மை எப்படியாவது மீட்டு தாயகம் திரும்ப வழி செய்யுமாறு இலங்கையைச் சேர்ந்த வீரர் ஒருவர் கண்ணீர் விட்டு கதறியழுள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் தனது மனைவி உயிரிழந்து விட்டதாகவும், பிள்ளையை பாடசாலைக்குக்கூட அனுப்ப முடியவில்லை எனவும் அவர் உருக்கத்துடன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ரஷ்ய இராணுவத்தில் கூடிய சம்பளம் மற்றும் சிறந்த வேலை வாய்ப்பு என்ற போலியான வாக்குறுதிகளால் ரஷ்யாவுக்கு அழைத்து வரப்படுகின்றார்கள்.

இராணுவத்தில் பணியாற்றப் போவதாகக் கூறப்பட்டாலும், வாக்னர் கூலிப்படையின் முன் வரிசையில் பணியாற்றச் சென்றது தான் நடந்தது.

அதிக சம்பளம், ரஷ்யாவில் காணி மற்றும் குடியுரிமை பெற்றுத் தருவதாக உள்ளூர் முகவர்கள் கூறினார்கள். எனினும், அந்த வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

பல மாதங்களாக சம்பளம் கூட வழங்கப்படவில்லை. ஆகையினால் முகவர்களின் போலி வாக்குறுதிகளை நம்பி உக்ரைன் - ரஷ்ய போர்க்களத்திற்கு வரவேண்டாம் - என்றார்.

எவ்வாறாயினும், இலங்கையின் ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களை ஏமாற்றிய இந்த மோசடியில் இலங்கை இராணுவத்தின் ஓய்வு பெற்ற மேஜர் ஒருவர் உட்பட பலர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட ஆறு பேர் கைது!

யாழ்ப்பாணம், மே. 05

வடமராட்சி கிழக்கு சாலை கடற்பகுதியில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாக ஒளி பாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்ட அறுவர் மூன்று படகுகளுடன் கைது செய்யப்பட்டனர்.

சட்டவிரோத செயற்பாடுகளை தடுத்து நிறுத்தும் நோக்கில் வெற்றிலைக்கேணி கடற்படை கடற்பரப்பில் தொடர் கைது நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் நிலையில், இதன் ஒரு பகுதியாக நேற்று முன் தினம் சாலை கடற்பகுதியில் வைத்து குறித்த ஆறு பேரும் சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களுடன் கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்கள் உடைமைகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். (அ)

# ஏறாவூரில் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு, மே. 05

ஏறாவூர் செங்கலடி பகுதியில் கைவிடப்பட்ட வீடொன்றின் பின்னால் ஆண் ஒருவரின் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நீதவான் பரிசோதனையின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இந்த மரணம் படுகொலையா அல்லது வேறு காரணமா என ஏறாவூர் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

ஒரு நாள் கொண்டாட்டம்

# 200 கோடி ரூபாவை செலவிட்ட கட்சிகள்

கொழும்பு, மே. 05

2024 ஆம் ஆண்டு மேதின கூட்டங்கள் மற்றும் பேரணிகளுக்காக இலங்கையின் அரசியல் கட்சிகள் சுமார் 200 கோடி ரூபாவை செலவிட்டுள்ளதாக தெரியவருகிறது.

பணவீக்கச் சூழல் காரணமாக இந்த ஆண்டு மேதின நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதற்கு வரலாற்றில் அதிக பணத்தைச் செலவிட நேரிட்டதாக அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேதினக் கூட்டங்களுக்கு மக்களை அழைத்து வருவதற்கான போக்குவரத்துச் சேவைகளுக்காக செலவீனங்களை அரசியல் கட்சிகளே ஏற்கவேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், மேடை அமைப்பு, ஒலிபெருக்கி, அலங்காரம், உணவு மற்றும் பானங்களை வழங்குவதற்கும் பெருந்தொகை நிதி கட்சிகளால் செலவிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதனிடையே, மேதின கூட்டங்கள் மற்றும் பேரணிகளை நடத்துவதற்காக பல அரசியல் கட்சிகள் நிதிப் பங்களிப்பு செய்ததாக பணம் கட்சித் தலைவர்கள், தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் பல்வேறு தரப்பினர் உதவிகளை வழங்கியதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த ஆண்டு தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கொண்டாட்டத்திற்காக அதிகளவான பணம் செலவிட வேண்டியிருந்ததாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டங்கள் நான்கு மாவட்டங்களில் நடைபெற்றதால் செலவு அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேபோன்று ஏனைய பிரதான கட்சிகளும் பெருந்தொகை நிதியை செலவிட்டுள்ள நிலையில், மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் மேதின கூட்டங்கள் மற்றும் பேரணிக்காக சுமார் ஒரு கோடி ரூபா வரை செலவிட்டுள்ளதாக தெரியவருகிறது.

சில கட்சிகளின் மேதின நிகழ்வுகளுக்கான செலவுகள் வர்த்தகர்களின் தலையில் கட்டப்பட்டதாகவும் தெரியவருகிறது. (அ)

# பல பில்லியன் ரூபாய் நாணயத்தை அழித்தது இலங்கை மத்திய வங்கி

கொழும்பு, மே. 05

கடந்த ஆண்டு புழக்கத்துக்கு பொருத்தமற்ற சுமார் 80 பில்லியன் ரூபாய் பெறுமதியான நாணயத் தாள்களை இலங்கை மத்திய வங்கி எரித்து அழித்துள்ளது.

கடந்த வருடம், மத்திய வங்கி நிர்ணயித்த நியமங்களுக்கு பொருத்தமற்ற 79.82 பில்லியன் ரூபா பெறுமதியான நாணயத்தாள்கள் அழிக்கப்பட்டன.

மத்திய வங்கி கடந்த வருடம் 250 மில்லியன் புதிய நாணயத்தாள்களை பெற்றுள்ளது.

அதற்கமைய, 469.28 பில்லியன் ரூபா பெறுமதியான நாணயத் தாள்களும் 571.95 மில்லியன் ரூபா பெறுமதியான நாணயங்களும் புழக்கத்திற்காக வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த 2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில் நாட்டில் நாணய சுழற்சி அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டில் 2.1 சதவீதமாக இருந்த பணப்புழக்கத்தின் வளர்ச்சி 2023ஆம் ஆண்டுக்குள் 15.6 சதவீதமாக உயர்ந்துள்ளது.

அதற்கமைய, கடந்த ஆண்டு நாட்டில் புழக்கத்தில் இருந்த பணத்தின் அளவு 1,186.5 பில்லியன் ரூபாயாகும். (அ)

# ஒன்லைன் ஊடாக சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடமாடும் சேவை ஆரம்பம்

கொழும்பு, மே. 05

ஒன்லைன் ஊடாக சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தும் வகையில், நீதிமன்ற நடமாடும் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அங்குனுகொலபெலஸ்ஸ, காலி, களுத்துறை ஆகிய இடங்களில் இந்த நீதிமன்ற நடமாடும் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலைகளில் 60 வீதமாக காணப்படும் அதிகாரிகள் பற்றாக்குறையால் ஏற்படும் சிக்கல்களுக்கு, இந்த திட்டத்தின் ஊடாக தீர்வு பெற்றுக்கொடுக்க முடியுமென நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஸ தெரிவித்தார்.

சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த அழைத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவு பாரிய அளவில் காணப்படுவதோடு, அதற்காக பொதுமக்களின் பணமே பயன்படுத்தப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தினமும் கைதிகளை நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்வதற்காக அதிகளவான அதிகாரிகள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாகவும் அவர் கூறினார்.

பிணை தீர்மானிக்கப்படுவது மற்றும் விளக்கமறியல் நீடிக்கப்படுவது உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காகவும் கைதிகளை நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்ல வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த சிக்கல்களை தவிர்ப்பதற்கு ஒன்லைன் ஊடான நீதிமன்ற நடமாடும் சேவை திட்டம் பயனுள்ளதாக அமைவதோடு, கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இந்த திட்டம் சிறந்ததாக அமையுமென நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஸ தெரிவித்தார். (அ)

# வேலைவாய்ப்பிற்காக இஸ்ரேல் செல்லும் இலங்கையர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, மே. 05

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதத்திற்குள் 2,771 இலங்கையர்கள் வேலைவாய்ப்புகளுக்காக இஸ்ரேலுக்கு சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கை, இஸ்ரேல் அரசாங்கங்களுக்கு இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில், இலங்கையர்களுக்கு தாதியர், விவசாயம், நிர்மாணத் துறைகளில் வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

அதற்கமைய, 409 பேர் தாதியர் சேவையிலும், 804 பேர் நிர்மாணத் துறையிலும், 1558 பேர் விவசாயத் துறையிலும் பணியாற்றச் சென்றுள்ளனர்.

மேலும் 172 இலங்கையர்கள் மே மாதத்தின் முதல் வாரத்தில் விவசாயத்துறை வேலைவாய்ப்புகளுக்காக இஸ்ரேலுக்கு பயணிக்கவுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் 1912 இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக இஸ்ரேலுக்கு சென்றிருந்தனர்.

அதனுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு வேலைவாய்ப்பிற்காக இஸ்ரேலுக்கு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை பாரிய அளவில் அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org